உ
சிவமயம்

அம்பலவாணக் கவிராயர் பாடிய

# சதுரகிரி
# அறப்பளீசுர சதகம்

பிரசுரித்தவர்கள்

## ச. இ. சோமசுந்தரம்

களபூமி விளானை - காரைநகர்

# மறுபிரசுரம் செய்து பரகப்பட்டது

## அறப்பளீ சுர சதகம்:

தமிழ்க் கவிதைகளின் போக்குக் காலத்துக்குக் காலம் வேறுபட்டு வந்துளது. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களின் நடை சாதாரண கல்வியறிவுடையவர்களால் விளங்கி கொள்ள இயலாது அவைகள் சங்க நூல்கள் என படும், பின்னர் சிந்தாமணி, சிலப்பதிகாரம், வளையாபதி, மணிமேகலை, குண்டலகேசி என்னும் ஐம்பெருங்காப்பியங்கள் தோன்றின. அவற்றுக்குப்பின் பாரதம் இராமாயணம் என்ற இதிகாசங்களும் புராண நூல்களும் பெருகலாயின. தமிழ்ப்புலவர்களின் போக்கில் ஒரு புதியதிருப்பம் ஏற்பட்டது. அதனால் 96 வகையான பிரபந்தங்கள் தோன்றின. பதிகம், சதனம் ஊஞ்சல். பிள்ளைத்தமிழ் என்ற வரிசை பெற்ற நூல்களில் அறப்பளீ சுர சதகம் ஒன்றாகும்.

இதனை இயற்றியவர் அம்பலவாணக்கவிநாயர் என்பவர், இவர் வாழ்ந்தகாலம் முதலியன திட்டமாக அறியப்படவில்லை. அறப்பளி என்பது தலத்தின் பெயர் அந்தத் தலம் சதுரகிரியிலுள்ளது அதைப் பரிபாலித்த புகழுக்குரியவர் மதவேள் என்பவர். அவர் ஒரு கொடைவள்ளலாக இருந்திருக்கலாம். அவர் அனுதினமும் சதுரகிரி அறப்பளீ சுரரை வழிபட்டும் அத்தவத்தைப் பரிபாலித்தும் இருக்கலாம்.
நூறுபாடல்கள் கொண்டது சதகம் இதில் ஒவ்வொரு தலைப்பில் அடங்கும் விடயங்கள் தெளிவாகக் கூறப்படுகின்றன உயர்பிறப்பு, இல்லான்சிறப்பு, நன்மாணாக்கர் இயல்பு, பொருள் செயல்வகை என மரபு வழுவாத தமிழ்ப்பாடல்கள் இவைபோல்வன அழகுற எடுத்து ஆளப்படுகின்றன.

சென்னை திருமகள் அச்சகத்தில் 1996ஆம் ஆண்டில் அச்சிட்டு இரத்தினநாயகர் குடும்பத்தினரால் வெளியிடப்பட்டது.

இன்று இந்த நூலைக் காரைநகர் களபூமி விளானையைத் சேர்ந்த திரு ச இ சோமசுந்தரம் என்னும் பெரியார் மறுபிரசுரம் செய்வது பாராட்டத்தக்கது.

பண்ணாகம், புலவர்மணி அ. ஆறுமுகம்
சுழிபுரம், 06-07-99

## வாழ்த்துகின்றேன்

பெரியார் திரு. ச. இ. சோமசுந்தரம் தமது சொந்தப்பணச் செலவில் சதுரகிரி அறப்பளீ சுர சதகம் நூலை வெளியிட்டு வைக்க முன்வந்தது யாவராலும் பாராட்டப்பட வேண்டியதாகும்.

நூலின் உள்ளே நுழைந்தவுடன் நூறுபாடல்களையும் படித்து முடிக்கவே மனம் வரும் நான் படித்து சுவைத்தது போல் நீங்களும் படித்துச் சுவையுங்கள்

*மு. தம்பிஐயா*
ஓய்வு பெற்ற ஆசிரியர்

## வெளியீட்டுரை

அறப்பளீ சுர சதகம் தொன்னூற்றாறு பிரபந்தங்களில் ஒன்றாகும் காரைநகர் களபூமி விளானைச் சேர்ந்த திரு. ச இ. சோமசுந்தரம் இவற்றை அச்சிட்டு வெளியிட முன்வந்தது எமக்கு ஓர் வாய்ப்பாகவுள்ளது. நாம் யாவரும் படித்து இன்புற்று பக்தி கொள்வோம்.

பஜனைச் சபையாரின் வெளியீடுகளுக்கு என்றும் மக்கள் நல்லாதரவு இருக்கின்ற காரணத்தால் வருடம் தோறும் பல் வகையான வெளியீடுகள் வெளிவருகின்றன. சபையார் வியாபார நோக்கம் இல்லாது ஞான தானப் பணியாக செய்துவரும் வெளியீடுகள் யாவற்றையும் மக்கள் வரவேற்று நல்லாதரவு வளங்கும் செயல் ஒன்றே போதுமானதாகும். அறப்பளீசுர சதகக் கருத்துக்கள் நிறைந்த பாடல்களைக் கொண்ட நூலாகும் ஒருமுறை படிப்போர்கள் மீண்டும் மீண்டும் படிக்க வேண்டும் என்று ஆசைப்படுவார்கள் இந்நூலை மீண்டும் அச்சிட்டு பரப்ப முன் வந்துள்ள காரைநகர் திரு.ச இ.சோமசுந்தரத்தின் துணிகரமான எண்ணம் யாவராலும் பாராட்டப்பட வேண்டியதாகும். இவரது செயலுக்கு நாம் யாவரும் நல்லாதரவு நல்க வேண்டியது கடமையாகும்.

இந்நூலை எமது பஜனைச் சபையின் வெளியீடாக மீண்டும் வெளியிடமுன்வந்த திரு ச இ சோமசுந்தரத்திற்கு நன்றி கூறிக்கொள்கின்றோம்.

''எல்லாம் இன்ப மயமே''

வழக்கம்பரை
சுழிபுரம்
06-07-1999

*க. வாமதேவன்*
கௌரவ செயலாளர்
பஜனைச் சபை

# மறுபிரசுரம் செய்து பாடப்பட்டது

## அறப்பளீ சுர சதகம்:

தமிழ்க் கவிதைகளின் போக்குக் காலத்துக்குக் காலம் வேறுபட்டு வந்துளது. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களின் நடை சாதாரண கல்வியறிவுடையவர்களால் விளங்கி கொள்ள இயலாது அவைகள் சங்க நூல்கள் என படும், பின்னர் சிந்தாமணி, சிலப்பதிகாரம், வளையாபதி, மணிமேகலை, குண்டலகேசி என்னும் ஐம் பெருங்காப்பியங்கள் தோன்றின. அவற்றுக்குப்பின் பாரதம் இராமாயணம் என்ற இதிகாசங்களும் புராண நூல்களும் பெருகலாயின. தமிழ்ப்புலவர்களின் போக்கில் ஒரு புதியதிருப்பம் ஏற்பட்டது. அதனால் 96 வகையான பிரபந்தங்கள் தோன்றின. பதிகம், சதனம் ஊஞ்சல். பிள்ளைத்தமிழ் என்ற வரிசை பெற்ற நூல்களில் அறப்பளீ சுர சதகம் ஒன்றாகும்.

இதனை இயற்றியவர் அம்பலவாணக்கவிநாயர் என்பவர், இவர் வாழ்ந்தகாலம் முதலியன திட்டமாக அறியப்படவில்லை. அறப்பளி என்பது தலத்தின் பெயர் அந்தத் தலம் சதுரகிரியிலுள்ளது அதைப் பரிபாலித்த புகழுக்குரியவர் மதவேள் என்பவர். அவர் ஒரு கொடைவள்ளலாக இருந்திருக்கலாம். அவர் அனுதினமும் சதுரகிரி அறப்பளீ சுரரை வழிபட்டும் அத்தவத்தைப் பரிபாலித்தும் இருக்கலாம்.
நூறுபாடல்கள் கொண்டது சதகம் இதில் ஒவ்வொரு தலைப்பில் அடங்கும் விடயங்கள் தெளிவாகக் கூறப்படுகின்றன உயர்பிறப்பு, இல்லான்சிறப்பு, நன்மாணாக்கர் இயல்பு, பொருள் செயல்வகை என மரபு வழுவாத தமிழ்ப்பாடல்கள் இவைபோல்வன அழகுற எடுத்து ஆளப்படுகின்றன.

சென்னை திருமகள் அச்சகத்தில் 1996ஆம் ஆண்டில் அச்சிட்டு இரத்தினநாயகர் குடும்பத்தினரால் வெளியிடப்பட்டது.

இன்று இந்த நூலைக் காரைநகர் களபூமி விளானையைத் சேர்ந்த திரு ச இ சோமசுந்தரம் என்னும் பெரியார் மறுபிரசுரம் செய்வது பாராட்டத்தக்கது.

பண்ணாகம், புலவர்மணி அ. ஆறுமுகம்
சுழிபுரம், 06-07-99

## வாழ்த்துகின்றேன்

பெரியார் திரு. ச. இ. சோமசுந்தரம் தமது சொந்தப்பணச் செலவில் சதுரகிரி அறப்பளீ சுர சதகம் நூலை வெளியிட்டு வைக்க முன்வந்தது யாவராலும் பாராட்டப்பட வேண்டியதாகும்.

நூலின் உள்ளே நுழைந்தவுடன் நூறுபாடல்களை யும் படித்து முடிக்கவே மனம் வரும் நான் படித்து சுவைத்தது போல் நீங்களும் படித்துச் சுவையுங்கள்

மு. தம்பியையா
ஒய்வு பெற்ற ஆசிரியர்

## வெளியீட்டுரை

அறப்பளீ சுர சதகம் தொன்னூற்றாறு பிரபந் தங்களில் ஒன்றாகும் காரைநகர் களபூமி விளானைச் சேர்ந்த திரு. ச இ. சோமசுந்தரம் இவற்றை அச்சிட்டு வெளியிட முன்வந்தது எமக்கு ஓர் வாய்ப்பாகவுள் ளது. நாம் யாவரும் படித்து இன்புற்று பக்தி கொள் வோம்.

பஜனைச் சபையாரின் வெளியீடுகளுக்கு என்றும் மக் கள் நல்லாதரவு இருக்கின்ற காரணத்தால் வருடம் தோறும் பல் வகையான வெளியீடுகள் வெளிவருகின் றன. சபையார் வியாபார நோக்கம் இல்லாது ஞான தானப் பணியாக செய்து வரும் வெளியீடுகள் யாவற் றையும் மக்கள் வரவேற்று நல்லாதரவு வளங்கும் செயல் ஒன்றே போதுமானதாகும். அறப்பளீ சுர சதகக் கருத்துக்கள் நிறைந்த பாடல்களைக் கொண்ட நூலாகும் ஒருமுறை படிப்போர்கள் மீண்டும் மீண் டும் படிக்க வேண்டும் என்று ஆசைப்படுவார்கள் இந் நூலை மீண்டும் அச்சிட்டு பரப்ப முன் வந்துள்ள காரைநகர் திரு.ச.இ.சோமசுந்தரத்தின் துணிகரமான எண்ணம் யாவராலும் பாராட்டப்பட வேண்டியதா கும். இவரது செயலுக்கு நாம் யாவரும் நல்லாதரவு நல்க வேண்டியது கடமையாகும்.

இந்நூலை எமது பஜனைச் சபையின் வெளியீ டாக மீண்டும் வெளியிடமுன்வந்த திரு ச இ சோமசுந் தரத்திற்கு நன்றி கூறிக்கொள்கின்றோம்.

''எல்லாம் இன்ப மயமே''

வழக்கம்பரை
சுழிபுரம்
06-07-1999

க. வாமதேவன்
கௌரவ செயலாளர்
பஜனைச் சபை

# அறப்பளீசுர சதகம்

## காப்பு வெண்பா

உம்பர்கோன் எம்பெருமான் ஒங்கறப்ப ளீசுரன்மேல்
பைம்பொருள்சே ருஞ்சதகம் பாடவே - அம்புவியோர்
ஆக்குந் துதிக்கையுளான் அன்புடையார்க் கின்பருளிக்
காக்குந் துதிக்கையுளான் காப்பு.

## உயர்பிறப்பு

பன்னிருசீர் ஆசிரிய விருத்தம்

கடலுலகில் வாழும்உயிர் எழுபிறப் பினுள்மிக்க
காட்சிபெறு நரசென்ம மாய்க்
கருதப் பிறத்தலரி திதினும்உயர் சாதியிற்
கற்புவழி வருத லரிது
வடிவமுடன் அவயவங் குறையாது பிழையாது
வருதல தனினு மரிது
வந்தாலும் இதுபுண்யம் இதுபாவ மென்றெண்ணி
மாசில்வழி நிற்ற லரிது
நெடியதன வான் ஆத லரிததின் இரக்கமுள
நெஞ்சினோ னாத லரிது
நேசமுடன் உன்பதத் தன்பனாய் வருதலிந்
நீள்நிலத் ததினு மரிதாம்
அடியவர்க் கமுதமே! மோழைபூ பதிபெற்ற
அதிபனெம தருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே 1

## மனையாட்டி சிறப்பு

கணவனுக் கினியளாய் ம்ருதிபாஷி யாய்மிக்க
கமலைநிகர் ரூபவதியாய்க்
காய்சின மிலாளுமாய் நோம்பழி யிலாததோர்
கால்வழியில் வந்தவளு மாய்

மணமிக்க நாணமடம் அச்சம் பயிர்ப்பென்ன
வருமினிய மார்க்கவதியாய்
மாமிமா மரக்கிதஞ் செய்பவளு மாய்வாசல்
வருவிருந் தோம்புவ ளாய்

இணையின்மகிள் நன்சொல்வழிநிற்பவளுமாய் 1வந்தி
யென்பெய ரிலாதவளு மாய்
இரதியென வேலீலை புரிபவளு மாய்பிறர்தம்
இவ்வழி செலாதவளு மாய்

அணியிழை யொருத்தியுண் டாயினவள் கற்புடையாள்
ஆகுமெம தருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர் கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 2

## நன்மக்கட்பேறு

தங்குலம் விளங்கிடப் பெரியோர்கள் செய்துவரு
தருமங்கள் செய்து வர லுந்
தன்மிகு தானங்கள் செய்தலும் கனயோக
சாதக னெனப் படுதலும்

மங்குத லிலாததன் தந்தையாய் குருமொழி
மாறாதுவழி பாடு செயலும்
வழிவழி வருந்தமது தேவதா பத்திபுரி
மார்க்கமுந் தீர்க்கா யுளும்

இங்கித குணங்களும் வித்தையும் புத்தியும்
ஈகையுஞ் சன்மார்கமும்
இவையெலாம் உடையவன் புதல்வனாம் அவனை
ஈன்றவன் புண்யவா னாம் (யே

2 அங்கச விரோதியே சோதியே நீதிசேர்
அரசனெம தருமை மதவேள்

---

1 வந்தி - மலடி 2 அங்கசன் - மன்மதன்

அனுதினமு மனதில் நினை தருசதுர் கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 3

## சகோரதர் ஒருமை

கூடப்பிறத்தவர்க் கெய்துதுயர் தமதுதுயர்
கொள்சுகந் தஞ்சுக மெனக்
கொண்டுதாந் தேடுபொருளவர்தேடு பொருளவர்
1 கோதில்புகழ் தம்புக ழெனத் (கொள்

தேடுற்ற அவர் நிந்தை தந்நிந்தைதந்தவந்
தீதிலவர் தவமா மெனச்
சீவனொன் றுடல்வே றிவர்க்கென்ன ஐந்தலைச்
சீறரவ மணிவாய் தொறும்

கூடுற்ற விரையெடுத் தோருடல் நிறைந்திடுங்
கொள்கைபோற் பிரிவின் றியே
கூடிவாழ் பவர்தம்மை யேசகோ தரரெனக்
கூறுவது வேதரும மாம்

ஆடிச் சிவந்தசெந் தாமரைப் பாதனே
அண்ணலேம தருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 4

## சற்குரு இயல்பு

வேதாந்த சித்தாந்த வழிதெரிந் தாசார
விரைவிஞ் ஞான பூர்ண
வித்யா விசேஷசற் குணசத்ய சம்பன்ன
வீரவை ராக்ய முக்ய

சாதா ரணப்பிரிய யோகமார்க் காதிகய
சமாதிநிஷ் டானுபவ ராய்த்
சட்சமய நிலைமையும் பரமந்த்ர பரதந்த்ர
தருமமும் பர சமயமும்

---

1 கோதில் - குற்றமில்லாத

நீதியின் உணர்ந்துதத் துவமார்க்க ராய்ப்பிரம
நிலைகண்டு பாச மிலராய்
நித்தியானந்தசை தன்யரா யாசையறு
நெறியுளோர் சற்குரவ ராம்

ஆதார மாயுயிர்க் குயிராகி யெவையுமாம்
அமலஎம தருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுரதேவனே. 5

## நன்மாணாக்கர் இயல்பு

வைதாலும் ஓர்கொடுமை செய்தாலு மோசீறி
மாறா திகழ்ந்தாலு மோ
மனதுசற் றாசிலும் கோணாது நாணாது
மாதா பிதா எனக்குப்

பொய்யாமல் நீயென்று கனிவோடும் பணிவிடை
புரித்துபொரு ளுட லாவியும்
புனிதஉன் தனதெனத் தத்தஞ்செய் திரவுபகல்
போற்றியவ ரடியில் வீழ்ந்து

மெய்யாக வேபரவி உபதேசம் அதுபெற
விரும்புவோர் சற்சீட ராம்
வினை வேரறும்படி அவர்க்கருள் செய்திடுவதே
மிக்கதே சிகரது கடன்

ஐயா! 1 புரம்பொடி படச்செய்த செம்மலே!
அண்ணலெம தருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே, 6

## பொருள் செயல் வகை

புண்ணிய வசத்தினாற் செல்வமது வரவேண்டும்
பொருளை ரட்சிக்க வேண்டும்

---

1 புரம் - திரிபுரம்

புத்தியுடன் அதுஒன்று நூறாக வேசெய்து
போதவும் வளர்க்கவேண்டும்
உண்ணவேண் டும்பின்பு நல்லவஸ்த் ராபரணம்
உடலில் தரிக்க வேண்டும்

உற்றபெரி யோர்கவிஞர் தமர் 1 ஆதுலர்க்குதவி
ஓங்கும்புகழ் தேடவேண்டும்
மண்ணில்வெகு தருமங்கள் செயவேண்டும் உயர்
வழிதேடவேண்டும் அன்றி (மோக்ஷ

வரிதிற் புதைத்துவைத் தியாத பேர்களே
மார்க்க மறியாக் குருடராம்
அண்ணலே! கங்கா சூலத்தலைவன் மோழைதரும்
அழகனெம தருமை மதவேள்

அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 7

## தீவழி விளக்கு

வஞ்சகர் தமைக்கூடிய மருவொணா தன்பிலார்
வா சலிற் செல்லொ ணாது
வாதெவ ரிடத்திலும் புரியொணா தறிவிலா
மடையர்முன் நிற்கொணாது

கொஞ்சமே னுந்தீது செய்யொணா தொருவர்மே
குற்றஞ்சொ லொண்ணா தயற்
கோதையர்களோடு பரிகா சஞ்செ யொண்ணாது
கோளுரைகள் பேசொ ணாது

நஞ்சுதரும் அரவொடும் பழகொணா திருள்வழி
நடந்துதனியேகொ ணாது
நதிபெருக் காகின் அதில்நீஞ்சல்செய் யொண்ணாது
நல்வழி மறக்கொ ணாது

---

1 ஆதுலர் - தரித்திரர்.

அஞ்சாம லரசன்முன் பேசொணா திவையெலாம்
அறியுமெம தருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 8

## ஒன்றற்கு ஒன்று அழகு செய்வன

வாழ்மனை தனக்கழகு குலமங்கை குலமங்கை
வாழ்வினுக் கழகு சிறுவர்
வளர்சிறுவ ருக்கழகு கல்வி கல்விக்கழகு
மாநிலந் துதிசெய் குணமாம்

சூழ்குண மதற்கழகு பேரறிவு பேரறிவு
தோன்றிடி லதற் கழகுதான்
தூயதவ மேன்மையுப காரம்விரதம் பொறுமை
சொல்லரிய பெரியோர் களைத்

தாழ்தல் பணிவிடை புரிதல் சீலநேசங் கருணை
சாற்றுமிவை அழகென்பர் காண்
[1]சௌரிமலரோன் அமரர் முனிவர்முச் சுடரெலாஞ்
சரணமெமை ரட்சி யெனவே

ஆழ்கட லுதித்துவரு விடமுண்ட கண்டனே
அண்ணலெம தருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 9

## ஒன்று இல்லாமையாற் பயன்படாதவை

கோவிலில் லாதவூர் நாசியில் லாதமுகங்
கொழுநனில் லாத மடவார்
குணமதில் லாவித்தை மணமதில் லாதமலர்
[2]குஞ்சர மிலாத சேனை

காவலில் லாதபயிர் பாலரில் லாதமனை
கதிர்மதி யிலாத வானம்

---

1 சௌரி - விஷ்ணு. 2 குஞ்சரம் - யானை.

கவிஞரில்லாதசபை சுதிலய மிலாதபண்
காவல ரிலாத தேசம்
ஈவதில் லாததனம் நியமமில் லாதசெபம்
இசைலவண மில்லாத ஊண்

இச்சையில் லாதபெண் போகநல மிவைதம்மின்
ஏதுபல னுண்டு கண்டாய்!
ஆவியனை யாட்கிடந் தந்தவா! கற்பதரு
ஆகுமெம தருமை மதவேள்

அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 10

## ஒன்றற்கொன்று தகாத சேர்க்கை

பூததயை யில்லாத லோபிய ரிடத்திலே
பொருளை அருளிச் செய்தனை
புண்ணியஞ் செய்கின்ற சற்சன ரிடத்திலே
பொல்லாத 1 மிடி வைத்தனை

நீதியகள் மூடர்க் கருந்ததி யெனத்தக்க
நெறி மாதரைத் தந்தனை
நிதானமுள உத்தமர்க் கிங்கித மிலாதகொடு
நீலியைச் சேர் வித்தனை

சாதியி லுயர்ந்தபே ரீனர்பின் னேசென்று
தாழ்ந்து பரவச் செய்தனை
தமிழருமை அறியாத புல்லர்மேல் கவிவாணர்
தார்பாட வேசெய் தனை

ஆதரவிலாபலிப் படிசெய்த தென்சொலாய்?
அமல! எம தருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

---

1 மிடி - வறுமை.

## குணக்கேடர் இயல்பு

மாறாத கலைகற்று நிலைபெற்ற சபையிலே
வாயிலா தவனொரு பதர்
வாள்பிடித் தெதிரிவரின் ஓடிப் பதுங்கிடும்
மனக்கோழை தானொரு பதர்

ஏறா வழக்குரைத் தனைவருஞ் சீசியென்
றிகழநிற் பானொரு பதர்
இல்லாள் புறஞ்செலச் சம்மதித் தவளோ
டிணங்கி வாழ்பவனொரு பதர்

வேறொருவர் மெச்சாது தன்னையே தான்மெச்சி
வீண்பேசு வானொரு பதர்
வேசையர்க ளாசைகொண் டுள்ளளவு மனையாளை
விட்டுவிடு வானொரு பதர்

ஆறாத துயரையு மிடியையுந் தீர்த்தருள்செய்
அமல! எம தருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 12

## செய்யத்தக்கவை

வாலிபந் தனில்வித்தை கற்கவேண்டும் கற்ற
வழியிலே நிற்க வேண்டும்
வளைகடல் திரிந்துபொருள் தேட வேண் டுந் தேடி
வளரறஞ் செய்ய வேண்டும்

சீலமுடை யோர்களைச் சேரவேண் டும் பிரிதல்
செய்யா திருக்க வேண்டுஞ்
செந்தமிழ்ப் பாடல் பல கொள்ளவேண் டுங்கொ
தியாகங் கொடுக்க வேண்டும் (ண்டு

ஞாலமிசை பலதரும நாட்ட வேண் டும் நாட்டி
நன்றாய் நடத்த வேண்டும்

நம்பண் இணை அடி பூசை பண்ண வேண்டும்
பண்ணி
னாலுமிகு பத்தி வேண்எம்
ஆலமமர் கண்டனே பூதியணி மிண்டனே!
அனகளவ தருமை மதவேள்
அனுதினமு மனதில் நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 13

## மேன்மேல் உயர்ச்சி

தன்மட்டி லிரவாது சீவனஞ் செய்பவன்
சாமர்த்திய முளபுருட னாஞ்
சந்ததம் பதின்மரைக் காப்பாற்று வோன்மிக்க
தரணிபுகழ் தருதேவ னாம்

பொன்மட்டி லாமலீந் தொருநூறு பேரைப்
புரப்பவன் பொருவி லிந்த்ரன்
புவிமீதி லாயிரம் பேர்தமைக் காப்பற்றும்
புண்ணவா னேபிரம னாம்

நன்மைதரு மதினா யிரம்பேர் தமைக்காத்து
ரட்சிப்பவன் செங்கண் மால்
நாளுமிவன் மேலதிக மாகவெகு பேர்க்குதவு
நரனே மகாதேவ னாம்

2 அன்மட்டு வார்குழலி பாகனே! ஏகனே
அண்ணலெம தருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 14

## செயற்குழு அருஞ் செயல்

நீர்மேல் நடக்கலாம் எட்டியுந் தின்னலாம்
நெருப்பைநீர் போற்செய்ய லாம்
நெடியபெரு வேங்கையைக் கட்டியே தழுவலாம்
நீளரவி னைப்பூண லாம்

---

1 மிண்டம்-நெற்றி. 2 அல்-இருட்டு. மட்டு-தேன்

பார்மீது மணலைச் சமைக்கலாஞ் சோறெனப்
பட்சமுட னேஉண்ண லாம்
பாணமொடு குண்டுவில கச்செய்ய லாமரப்
பாவை பேசப் பண்ணலாம்
ஏர்மேவு காடியுங் கடையுற்று வெண்ணெயும்
எடுக்கலாம் புத்தி சற்றும்
இல்லாத மூடர்தம் மனதைத் திருப்பவே
எவருக்கு முடியாது காண்
ஆர்மேவு கொன்றைபுனை வேணியா! சுரர்பரவும்
அமலனே! அருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 15

## உத்தமராவோர்

செய்ந்நன்றி மறவாத பேர்களு மொருவர்செய்
தீமையை மறந்த பேரும்
திரவியந் தரவரினும் ஒருவர்மனை யாட்டிமேற்
சித்தம் வையாத பேரும்
கைகண் டெடுத்தபொருள் கொண்டுபோய் பொரு
கையிற் கொடுத்த பேருங் (ளாளர்
காசினியி லொருவர்செய் தருமங் கெடாதபடி
காத்தருள் செய்கின்ற பேரும்
பொய்யென்று நிதிகோடி வரினும் வழக்கழிவு
புகலாத நிதிகொள் பேரும்
புவிமீது தலைபோகு மென்னினுங் கனவிலும்
பொய்யுரை யாத பேரும்
ஐயஇங் கிவரெலாஞ் சற்புருட ரென்றுலகில்
அகமகிழ்வ ரருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 16

## இதுவுமது

அடைக்கல மெனத்தேடி வருவோர் தமைகாக்கும்
அவனே மகாபுருடனாம்
அஞ்சாம லெதுவரினும் எதுபோகி லுஞ்சித்தம்
அசைவிலான் மகாதீரனாம்
தொடுத்தொன்று சொன்னசொல் தப்பாது செய்கின்ற
தோன்றலே மகாராஜ னாந்
தூறிக் கலைக்கின்ற பேர்வார்த்தை கேளாத
துரையே மகாமேரு வாம்
அடுக்கின்ற பேர்க்குவரும் இடர்தீர்த் திரட்சிக்கும்
அவனே மகா த்யாகியாம்
அவரவர் தராதர மறிந்துமரி யாதைசெயும்
அவனே மகாஉசித னாம்
அடர்க்கின்ற முத்தலைச் சூரனே! லோலனே!
அமலனே! அருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தரு சதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 17

## ஒன்றிலொன்று இல்லாமை

காமிக்கு முறையில்லை வேசைக்கு நாணில்லை
கயவர்க்கு மேன்மை யில்லை
கன்னமிடு கள்வருக் கிருளில்லை விபசார
கன்னியர்க் காணை யில்லை
தாமென மயக்கறுத் தோங்குபெரி யோர்க்குவரு
ஜாதிகுல மென்ப தில்லை
தாக்ஷண்ய முடையபேர்க் கிகலில்லை யெங்கு
சார்பிலார்க் கிடம தில்லை (மொரு
பூமிக்கு ளீயாத லோபர்க்கு வளமான
புகழென்ப தென்று மில்லை.

புலையர்க்கு நிசமில்லை கைப்பொரு ளிலாதோர்
புருடருக் கொன்று மில்லை.

1 யாமினி தனக்குநிகர் கந்தரத் திறைவனே!
அன்புடைய அருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 18

## யாக்கை நிலையாமை முதலியவை!

காயமொரு புற்பதம் வாழ்வுமலை சூழ்தருங்
காட்டி வாற்றின் பெருக்காங்
கருணை தரு புதல்வர்கிளை மனைமனைவி யிவை
கானல் காட்டும் ப்ரவாகம் (யெலாங்
மேயபுஜ பலவ லுமை யிளமையழ கிவையெலாம்
வெயின் மஞ்சளுயீர் தானுமே
வெட்டவெளி தனில்வைத்த தீபமென வேகருதி
வீண்பொழுது போக்காமலே
நேயமுட னேதெளிந் தன்பொடுன் பாதத்தில்
நினைவுவைத் திரு போதிலும்
நீர்கொண்டு மலர்கொண்டு பரிவுகொண்டர்ச்சிக்க
நிமலனே! அருள் புரிகுவாய்
ஆயுமறி வாளர்பணி பாதனே! போதனே!
அண்ணல்! எமதருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 19

## திருமங்கை இருப்பிடம்

நற்பரி முகத்திதிலே மன்னவரிடத்திலே
நாகரிகர் மாமனையிலே
நளினமலர் தன்னிலே கூவினந் தருவிலே
நிறைகொண்ட பைந் துளவிலே

---

1 யாமினி - இராத்திரி

கற்புடையர் வடிவிலே கடலிலே கொடியிலே
கல்யாண வாயில் தனிலே
சுடிநக ரிடத்திலே நற்செந்நெல் விளைவிலே
கதிர்பெறு விளக் கதனிலே

பொற்புடைய சங்கிலே மிக்கோர்கள் வாக்கிலே
பொய்யாத பேர் பாலிலே
பூந்தடந் தன்னிலே பாற்குடத் திரையிலே
போதகத் தின் சிரசிலே

அற்பெருங் கோதைமலர் மங்கைவா ழிடமென்பார்
அண்ணல்! எமதருமை மதவேள்
அனுதினமு மனதில் நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 20

## மூதேவி இருப்பிடம்

மிதமன்றி அன்னம் புசிப்போ ரிடத்திலும்
மிகுபாஷை யோரிடத்தும்
மெய்யோன் றிலாமலே பொய்பேசி யேதிரியு
மிக்கபா தகரிடத்தும்

கதியொன்று மிலர்போல மலினங் கொழும்பழைய
கந்தை அணி வோரிடத்துங்
கடிநா யெனச் சீறி எவரையுஞ் சேர்க்காத
கன்னிவாழ் மனையகத்தும்

2 ததிசேர் கடத்திலுங் கர்த்தபத் திடையிலுஞ்
சாந்த ஆட் டின் திரளிலுஞ்
சாம்பிண முகத்திலும் இவையெலாம் கவலைபுரி
3 தௌவைவாழ் இடமென்பர் காண்

அதிரூப மலைமங்கை நேசனே! மோழைதரும்
அழகனெம தருமை மதவேள்

---

1 கோதை - பெண் கூந்தல். 2 ததி - தயிர்.
3 தௌவை - மூதேவி.

அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே: 21

## குணாகுணம் இரண்டிலும் பயன்படாமை

குணமற்ற பேய்முருகங் கைத்தழை தழைத்தென்ன
குட்டநோய் கொண்டு மென்ன
குரைக்கின்ற நாய்மடி சுரந்தென்ன சுரவாது
கொஞ்சமாய்ப் போகி லென்ன

மணமற்ற செம்முருக் கதுபூத் தலர்ந்தென்ன
மலராது போகி லென்ன
மதுரமுல் லாதஉவர்க் கடல்நீர் கறுத்தென்ன
மாவெண்மை யாகிலென்ன

உணவற்ற பேய்ச்சுரை படர்ந்தென்ன படராது
உலர்ந்துதான் போகி லென்ன
உதவாத பேர்க்குவெகு வாழ்வுவந் தாலென்ன
ஓங்குமிடி வரிலென்ன காண்

அணியுற்ற பைங்கொன்றை மாலிகா பரணனே!
ஆதியே! யருமை மதவேள்
அனுதின மு மனதில் நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 22

## குறைவுற்றுங் குணங் கெடாமை

தறிபட்ட சந்தனக் கட்டை பழு தாயினுஞ்
சார்மணம் பழுதாகுமோ
தக்கபால் சுவறிடக் காய்ச்சினும் அதுகொண்டு
சாரமது ரங்குறையு மோ

நிறைபட்ட கதிர்மணி அழுக்கடைந் தாலுமதின்
நீள்குணம் மழுங்கிவிடு மோ
நெருப்பிடை யுருக்கினும் அடிக்கினுந் தங்கத்தின்
மிறையுமாற் றுங்குறையுமோ

[1] கறைபட்ட பைம்புயல்மறைத்தாலும் அதுகொண்டு
கதிர்மதி கனம்போகு மோ
கற்றபெரி யோர்மகிமை அற்பரறி கிலரேனுங்
காசினி தனிற் போகுமோ

அறிவுற்ற பேரைவிட்டகலாத மூர்த்தியே!
ஐயனே! அருமை மதவேள்
அனுதின மு மனதில் நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 23

## இதற்கு உதவிசெய்வது இதுவெனல்

வானவர் பிதிர்கன்முச் சுடர்மூவர் கோள் கட்கும்
வாழ்வுதரும் உதவி புவனம்
வளமிக்க புவனந் தனக்குமேன் மே லுதவி
வாழ்வுபெற் றிடிமன்ன ராம்

தேன்அமர் நறுந்தொடையல் புனைமன்ன வர்க்குதவி
சேர்ந்தகுடி படைவர்க்க மாஞ்
சேர்குடி படைக்குதவி விளை பயிர் பயிர்க்குதவி
சீர்பெற வழங்கு மழையாம்

மேல்நிமிர் மழைக்குதவி மடமாதர் கற்பொன்று
வேந்தர்தம் நீதி யொன்று
வேதிய ரொழுக்கமொன் 'றிம்மூன்று 'மேயென்று
மிக்கபெரி யோருரை செய்வார்

[2] ஆன் அமர் நெடுங்கொடி உயிர்த்தளம் இறைவனே
அதிபனே! யருமை மதவேள்
அனுதினமு மனதில் நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 24

## இதனைக் கண்டு மகிழ்வது இதுவெனல்

தந்தைதாய் மலர்முகங் கண்டுநின் [3] றாலிப்கது
அவர் தந்த சந்ததிய தாம்

---

1 கறை-இருள் 2 ஆன்-இடபம் 3 ஆலிப்பது-களிப்பது.

சந்திரோ தயங்கண்டுபூரிப்ப துயர்வாவி
தங்குபைங் குமுதமல ராம்
புந்திமகிழ் வாயிர்வி வருதல்கண் டகமகிழ்வ
பொங்குதா மரைமலர் களாம்
போதவும் புயல்கண்டு கண்களித் தேநடம்
புரிவது மயூர இனமாம்
சிந்தைமகிழ் வாயுதவு தாதா வினைக்கண்டு
சீர்பெறுவ திரவலர் குழாம்
திகழ் நீதி மன்னரைக் கண்டுகளி கூர்வதிச்
செமெலாம் என்பர் கண்டாய்
அந்தியம் வானனைய செஞ்சடா டவியனே!
அமலனே! பருமை மதவேள்
அனுதினமு மனதில் நினை தருதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 25

அதுவது ஆகாமை

உள்ளன் பிலாதபேர் தித்திக்கவே பேசி
உறவாடும் உறவும் உறவோ
உபசரித் தன்புடன் பரிமா றிடாதசோ
றுண்டவர்க் கன்ன மாமோ
தள்ளா திருந்துகொண் டொருவர்போய் பார்த்துவரு
தக்கபயிர் பயிராகு மோ
தளகர்த்தன் ஒருவனில் லாமல்முன் சென்றிடுந்
தானையுந் தானை யமோ
விள்ளாத போகமில் லாதபெண் மேல்வரு
விருப்பமும் விருப்ப யாமோ
குகடன் பட்டபேர் செய்கின்சீவனமு
மிக்கசீவனமாகுமோ

1 அள்ளா திருக்கருணை யாளனே! தேவர்தொழும்
ஆதியே! யருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 26

## நற்குணங்களுக்கு இடம் ஆகாதவர்

வெறிகொண்ட 2மற்கடம் பேய்கொண்டு கள்ளுண்டு
வெங்காஞ் சொறிப்புதலிலே
வீழ்ந்துதேள் கொட்டிடச் சன்மார்க்கம் எள்ளளவு
மேவுமோ மேவாது போல்

குறைகின்ற புத்தியா யதிலற்ப சாதியாய்க்
கூடவே யிளமையுண் டாய்க்
கொஞ்சமாம் அதிகார முங்கிடைத் தால்மிக்க
குவலயந் தனிலவர்க்கு

நிறைகின்ற பத்தியுஞ் சீலமு மேன்மையு
நிதானமும் பெரியோர்கள் மேல்
நேசமும் ஈகையும் இவையெலாங் கனவிலும்
நினைவிலும் வராது கண்டாய்

அறைகின்ற சுருதியின் பொருளான வள்ளலே!
அண்ணலே! யருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 27

## இதனால் இன்ன முறையனாம் எனல்

தன்னால் முடிக்கவொண் ணாதகா ரியம்வந்து
தான்முடிப் போன்தமைய னாம்
தன்தலைக் கிடர்வந்த போதுமீட் டுதவுவோன்
தாய்தந்தை யென்ன லாகும்
ஒன்னார் செய்யுங்கொடுமை யால்மெலிவு வந்தபோ
துவவுவோன் இட்ட தெய்வம்

---

1 அள்ளாது - குறைபாது. 2 மற்கடம் - குரங்கு

யுத்திபுத் திகள்சொல்லி மேல்வருங் காரியம்
உரைப்பவன் குருஎன்ன லாம்

எந்நாளும் வருநன்மை தீமைதன தென்னவே
எண்ணிவரு வோன் பந்துவாம்
இருதய மறிந்துதன் சொற்படி நடக்குமவன்
எவனெனினு மவனே சுதன்

அந்நார 1 மும்பணியு மெற்நாளு மேபுனையும்
அண்ணலே! யருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 28

## அவரவரிடத்து நடக்கு முறை

மாதா பிதாவினுக் குள்ளன் புடன்கனிவு
மாறாத நல்லொழுக் கம்
மருவுகுரு வானவர்க்கினியஉப சாரமுன்
வார்த்தை வழிபா டடக்கம்

2 காதார் கருங்கண்மனை யாள்தனக் கோசயன
காலத்தில் நய பாஷணங்
கற்றபெரி யோர்முதியர் வரும் 3 ஆதுலர்க்கெலாங்
கருணைசே ரருள் 4 விதானம்

நீதிபெறு மன்னவ ரிடத்ததிக பயவிநய
நெறியுடைய பேர்க் கிங்கிதம்
நேயமுள தமர்தமக் ககமகிழ் வுடன்பிரிவு
நேரல ரிடத்தில் வயிரம்

ஆதிமனு நூல்சொ லும் வழக்கமிது வாகுமெம
தையனே! யருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 29

---

1 நாரம்-கங்கை; 2 காது-கொலை.
3 ஆதுலர்-தரித்திரர்; 4 விதானம்-வணக்கம்.

## குணத்தை விட்டு குற்றத்தைக் கவர்தல்

துட்டவிக டக்கவியை யாருமே மெச்சுவார்
சொல்லுநற் கவியை மெச்சார்
துர்ச்சனர்க் ககமகிழ்ந்து துபசரிப் பார்வருந்
தூயரைத் தள்ளிவிடு வார்

இட்டமுள தெய்வந் தனைக்கரு திடார் [1]கறுப்
பென்னிலோ போய்ப் பணிகுவார்
ஈன்றதாய் தந்தையைச் சற்றுமதி யார்வேசை
என்னிலோ காலில் வீழ்வார்

நட்டலா பங்களுக் குள்ளான பந்துவரில்
நன்றாக வேபேசி டார்
நாளுமொப் பாரியாய் வந்தபுத் துறவுக்கு
நன்மைபல வேசெய்கு வார்

அட்டதிசை சூழ்புவியி லோங்குகலி மகிமைகாண்
அத்தனே! யருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 30

## குணங்காண் குறி

கற்றோர்க ளென்பதைச் சீலமுட னேசொலுங்
கனவாக்கி னாற்காண லாங்
கற்புளா ரென்பதைப் பார்க்கின்ற பார்வையொடு
கால்தடையி னுங்காண லாம்

அற்றோர்க ளென்பதனை ஒன்றிலும் வாரா
வடக்கத்தி னால்அறிய லாம்
அறமுளோ ரென்பதைத் பூததயை யென்னுநிலை
அதுகண்டு தான் அறிய லாம்

வித்தோங்கு பயிரைக் கிளைத்துவரு துடியினால்
விளையுமென் றேஅறிய லாம்

---

1 கறுப்பு - அற்பதேவதை.

வீரமுடை யோரென்ப தோங்கிவரு நேரிய
விசேடத்தி னால்அறிய லாம்
அத்தார ! குணத்தினாற் குலநலந் தெரியலாம்
அண்ணலே! யருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 31

## கூடிற் பயன்படல்

செத்தைபல கூடியொரு கயிறாயின் அதுகொண்டு
திண்கரியை யுங்கட்ட லாம்
திகழ்ந்துபல துளிகூட யாறாயின் வாவியொடு
திறள் ஏரி நிறைவிக்க லாம்

ஒத்துநுண் பஞ்சுபல சேர்ந்துநூ லாயிடின்
உடுத்திடுங் கலையாக்க லாம்
ஓங்கிவரு கோ லுடன் சீலையுங் கூடினால்
உயர்கவிகை யாக்கொள்ள லாம்

மற்றுமுயர் தண்டுலத் தோடுதவி டுமிகூடின்
மல்குமுளை விளைவிக்க லாம்
மனமொத்த நேயமொடுகூடி யொருவர்க்கொருவர்
வாழின்வெகு வெற்றிபெய லாம்

அற்றசனி யைப்பொருத் தரிபிரகர் தேடரிய
அமலனே! யருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 32

## அததற்கு வெற்றியிடம்

கலைவலா ருக்கதிக சயமதுர வாக்கிலே
காமுகர்க் கதிகசய மோ
கைப்பொருளி லேவரு [1] மருத்துவர்க்கோ சயங்
கைவிசே டந்தனனிலே

---

1 மருத்துவர்-வைத்தியர்.

நலமுடைய வேசையர்க் கழகிலே அரசர்க்கு
நாளும்ரண சூரத்திலே
நற்றவர்க் கதிசயம் உலகுபுகழ் பொறையிலே
ஞானவே தியர்தமக் கோ

குலமகிமை தன்னிலே வைசியர்க் கோ சயங்
கூறியது லாக்கோலி லே
குற்றமில் லாதவே ளாளருக் கோசயங்
குறையாத 1 கொழுமுனையிலே

அலைவில்குதி ரைக்குநடை வேகத்தி லதிகசயம்
ஆமென்ப ரருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே 33

## ஒன்றனில்லாமையாற் பாழ்படல்

தாம்பூல தாரண மிலாததே வருபூர்ண
சந்த்ரநிகர் முகசூனி யம்
சற்சன ரிலாததே வெகுசனஞ் சேர்ந்துவாழ்
தரும்பெரிய நகர்சூனி யம்

மேம்பா டிலாதமன் னவர்கள்வந் தாள்வதே
மிக்கதே சச்சூனி யம்
மிக்கசற் புத்திர னிலாததே நலமான
வீறுசேர் க்ருகசூனி யம்

சோம்பாத தலைவரில் லாததே வளமுடன்
சொல்லுயர் சபாசூனி யம்
தொல்லுலகி லனைவர்க்கு மாநிதிய மில்லதே
சுத்தசூ னியமென்பர் காண்.

ஆம்பல்வத னத்தனைக் குகனையீன் றருள்செய்த
அத்தனே! யருமை மதவேள்,

1 கொழு - காறு,

அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 34

## மூடர் தாரதம்மியம்

பெண்புத்தி கேட்கின்ற மூடரும் தந்தைதாய்
பிழைபுறஞ் சொலுமூட ரும்
பெரியோர்கள் சபையிலே 1முகடேறி வந்தது
பிதற்றிடும் பெருமூட ரும்

பண்புற்ற சுற்றஞ் சிரிக்கவே இழிவான
பழிதொழில்செய் திடுமூட ரும்
பற்றற்ற பேர்க்குமுன் பிணைநின்று பின்புபோய்ப்
பரிதவித் திடும்மூடரும்

கண்கெட்ட மாடென்ன ஓடியிர வலர்மீது
காய்ந்துவீழ்ந் திடுமூட ருங்
கற்றறி விலாதமுழு மூடருக் கிவரெலாங்
கால்மூடர் அரைமூடர் காண்

2 அண்கற்ற நாவலருக் காகவே தூதுபோம்
அய்யனே யருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே 35

## இதற்கு இது வேண்டுமெனல்

தனக்குவெகு புத்தியுண் டாகினும் வேறொருவர
தம்புத்தி கேட்க வேண்டும்
தானதிக சூரனே யாகினுங் கூடவே
தளசேக ரங்கள் வேண்டும்

கனக்கின்ற வித்துவா னாகினுந் தன்னினுங்
கற்றோரை நத்தவேண் டும்
காசினியை ஒருகுடையி லாண்டாலும் வாசலிற்
கருத்துள்ள மந்த்ரி வேண்டும்

---

1 முகடு-முக்கிய இடம். 2 அண்-மேன்மை.

தொனிக்கின்ற சங்கீத சாமர்த்திய னாகிலுஞ்
சுதிகூட்ட ஒருவன் வேண்டுஞ்
சுடர்விளக் காயினா நன்றாய் விளங்கிடத்
தூண்டுகோ லொன்று வேண்டும்

அனற்கண்ணனே! படிக சங்கநிகர் வண்ணனே
ஐயனே! யருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 36

## வறுமையின் கொடுமை

மேலான சாதியி லுதித்தாலும் அதிலென்ன
வெகுவித்தை கற்றுமென்ன
மிக்கஅதி ரூபமொடு சற்குணமிருந் தென்ன
மிகுமானி யாகி லென்ன

பாலான மொழியுடைய னாயென்ன ஆசார
பரனா யிருந்து மென்ன
பார்மீது வீரமொடு ஞனவா னாயென்ன
பாக்கிய மிலாத போது

வாலாய மாய்ப்பெற்ற தாயுஞ் சலித்திடுவள்
வந்தசுற் றமுமிகழு மே
மரியாதை யில்லாம லனைவரும் பேசுவார்
மனைவியுந் தூறு சொல்வாள்

ஆலால முண்டகனி வாயனே! நேயனே!
அனகனே! யருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 37

## ஈனத்துவம்

இரப்பவன் புவிமீதி லீனன் அவனுக்கில்லை
என்னுமவன் அவனி லீனன்

ஈகின்ற பேர்தம்மை யீயாம லேகலைந்
திடுமுடன் அவனி லீனன்

உரைக்கின்ற பேச்சிலே பலனுண்டெனக் காட்டி
உதவிடான் அவனி லீனன்
உதவவே வாக்குரைத் தில்லையென்றேசொ லும்
உலுத்தனோ அவனி லீனன்

பரக்கின்ற யாசகர்க் காசைவார்த் தைகள்சொல்லிப்
பலகா லலைந்து திரியப்
பண்ணியே யில்லையென் றிடுகொடிய பாவிறே
பாரிலெல் லோர்க்கு மீனன்

1 அரக்கிதழ்க்குமுதவா யுமைநேச னே! எளியர்
அமுதனே அருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 38

## மறைப்பனவும் வெளிப்படுத்துவனவும்

சென்மித்த வருடமும் உண்டான அத்தமுந்
தீதில்கிர காச்சார முந்
தின்றுவரும் ஔடதமு மேலானே தேசிகன்
செப்பிய மசுாமந்த்ர மும்

புன்மையவ மானமுந் தானமும் பைம்பொனணி
புனையுமட வார்கலவி யும்
புகழ்மேவு மானமு மிவைஒன்ப துந்தமது
புந்திக்கு ளேவைப்பதே

தன்மமென் றுரைசெய்வ ரொன்னார் கருத்தையுந்
தன்பிணியை யும்பசியை யுந்
தான்செய்த பாவமு மிவையெலாம் வேறொருவர்
தஞ்செவியில் வைப்பதியல் பாம்

---

1 அரக்கு - சிவப்பு.

1 அன்மருவு கண்டனே! மூன்றுலகு மீன்றவுமை
அப்பனே! யருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 39

## தேவர்கள் கால அளவை

சதுர்யுக மோரிரண் டாயிரம் பிற்படிற்
சதுமுகற் கொருதினம் தாஞ்
சாற்றுமித் தினமொன்றி லேயிந்த்ர பட்டங்கள்
தாமுமீ ரேழ்சென்றிடும்

மதிவலியு மித்தொகையின் அயனாயுள் நூறுபோய்
மாண்டபோ தொருகற்ப மாம்
மாறிவரு கற்பமொரு கோடிசெ றால்நெடிய
மால்தனக் கோர்தினம தாம்

துதிபரவு மித்தொகையி லொருகோடி நெடியமால்
தோன்றியே போய்மறைந் தால்
தோகையோர் பாகனே! நீநகைத் தணிமுடி
துளக்கிடுங் காலமென் பார்

அதிகமுள பலதேவர் தேவனே! தேவர்கட
கரசசே! அருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே 40

## தூய்மையிடமும் தூய்மை செய்வனவும்

வாம்பரி தனக்கதிக புனிதமுக மதனிலே
மறையவர்க் குயர்புனித மோ
மலரடியி லேபுனிதம் ஒளிகொள் கண்ணாடிக்கு
மாசின்முற் புறமதனிலே

மேம்படும் பசுவினுக் குப்பிற் புறத்திலே
மிக்கமட மாதருக்கோ

---

1 அல்மருவு-இளைப்போன்ற விஷம்.

மேனியெல் லாம்புனித மாகும் ஆசௌசமொடு
மேவுவனி தையர்தமக் கும்

தாம்பிரம் அதற்குமிகு வெள்ளிவெண் கலம்அபந்
தங்கம் ஈயந்தமக் கும்
தரும்புனிதம் வருபெருக் கொடுபுளி
சாருமண் டாது 'சரணம் கணஞ்சாம்பல்

ஆம்புனித மிவையென்பர் மாமேரு வில்லியே!
அனகனே! அருமை மதவேள்
அனுதினமு மன தில்நினை தருசதுர கிரிவளர்.
அறப்பளீ சுர தேவனே. 41

## அடங்காதவற்றை அடக்கும் உபாயம்

கொடியபொலி யெருதை யிருமூக்கி லுங் கயிறொன்று
கோத்துவச விர்த்தி கொள்வார்
குவலயத் தனின்மதக் ,களிறதனை யங்குசங்
கொண்டுவச விர்த்தி கொள்வார்.

படியில்விட வரவைமந் திரதந் திரத்தினாற்
பற்றிவச விர்த்திகொள் வார்
பாய்பரியை நெடிதடி வாளமது ,கொடுநடை
பழக்கிவச விர்த்திகொள் வார்.

விடமுடைய துட்உரைச் சோர்பந்து கைகொண்டு
வீசிவச விர்த்திகொள் வார்
மிக்கபெரி யோர்களும் கோபத்தை யறிவால்
விலக்கிவச விர்த்திகொள் வார்.

அடியவர் துய்க்கவரு செந்தா மரைப்பதத்
தையனே! அருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிளிவளர்
அறப்பளீ சுர தேவனே! 42

## ஒளியின் உயர்வு

செழுமளிக் கொளியதன் மட்டிலே யதினுமோ
செய்ய 1 கச் சோதமெனவே
செப்பிடுங் கிருமிக்கு மிச்சமொளி யதனினுந்
தீபத்தி னொளி அதிகமாம்

பழுதிலாத் தீவர்த்தி தீபத்தி னதிகமாம்
பகல்வர்த்தி யதிலதிக மாம்
பாரமத் தாப்பினொளி வதிலதிக மதிலுமோ
பனிமதிக் கொளியதிக மாம்

விழைவுதரு பரிதிக்கு மனுநீதி மன்னர்க்கும்
வீரவித ரணிகருக்கும்
மிக்கவொளி திசைதொறு போய்வினங் கிடுமென்ன
விரகுளோ ருரைசெய்கு வார்

அழல்விழிகொ டெரிசெய்து மதனவேள் தனைவென்ற
அண்ணலே! அருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 43

## குணம் குற்றமாதல்

வான்மதியை நோக்கிடிற் சோரர்கா மூகருக்கு
மாறாத வல்லிடம தாம்
மகிழ்நன் தனைக்காணி லிதமிலா விபசரிய
மாதருக் கோவிடம தாம்

மேன்மைதரு நற்சுவை பதார்த்தமுஞ் சுரரோக
மிக்கபேர்க் கதிகவிட மாம்
வித்தியா திபர்தமைக் கண்டபோ ததிலோப
வீணர்க்கெ லாம்விடம தாம்

ஈனமிகு புன்கவிவ லோர்க்கதிக சபைதனில்
ஏலாத கொடியவிட மாம்

---

1 கச்சோதம் - மின்மினி

ஏற்றமில் லாதபடு பாவிகட் கறமென்னில்
எந்நாளு மதிக விடமாம்

ஆனதவ யோகியர்களிதயதா மரையுறையும்
அண்ணலே! அருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 44

## உயர்வு அன்றி தாழ்வும் சிறக்குமிடம்

வெகுமான மாகிலும் அவமான மாகிலும்
மேன்மையோர் செய்யிலழ காம்
விரகமே யாகிலுஞ் சரசமே யாகிலுஞ்
விழைமங்கை செய்யி லழகாம்

தகுதாழ்வு வாழ்வுவெகு தருமங்களைச் செய்து
சாரிலோ பேரழக தாஞ்
சரீரத்தி லோரூன மானமெது வாகிலுஞ்
சமர்செய்து வரிலழக தாம்

நகமேவு மதகரியிலேறினு ந் தவறினு
நாளும் அது வோரழக தாம்
நாய்மீதி லேறினும் வீழினுங் கண்டபேர்
நகைசெய்தழ கன்றென்பர் காண்

அகமாயு நற்றவர்க் கருள்புரியும் அய்யனே!
ஆதியே! அருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 45

## நல்வினை செய்தோர்

சரணெனக் காத்தவன் மெய்யினால் வென்றவன்
தானமிதள யாதுரவி னோன்
தந்தைசொல் மாறாதவன் முன்னவற் கானவன்
தாய்பழி துடைத்தநெடி யோன்

வருபிதிர்க் குதவினேன் தெய்வமே துணையென்று
மைந்தன்மனை வியைவிதைத் தோன்
மாறன தந்தையைத் தமையனைப் பிழைகண்டு
மாய்த்துலகில் மகிமைபெற் றோன்

கருதரிய சிபியரிச் சந்திரன் மாலிலி
கணிச்சியோன் சுமித்திரை சுதன்
கருடன் பகீர தனுடன் சிறுத் தொண்டனோடு
கானவன் பிரகலா தன்

அரியவல் விபீஷண னெனுமகா புருடராம்
அத்தனே! அருமை மதவேள்
அனுதினமு மனதில் நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 46

## தீவினை செய்தோர்

வாயிகழ்வு பேசிமிகு வாழ்விழந் தோன் சிவனை
வைதுதன் தலைபோயினோன்
மற்றொருவர் தாத்தி லிச்சைவைத் துடலெலா
மாறாத வடுவாயினோன்

தாயத்தி னோர்க்குள்ள பங்கைக் கொடாமலே
சம்பத் திழந்துமாய்ந் தோன்
தக்கபெரி யோர் தமை வணங்கா மதத்தினால்
தந்திவடி வாயலைந் தோன்

மாயனைச் சபைதனில் நிந்தனைசெய்தொளிகொண வ
மணிமுடி துணிந்து மாய்ந்தோன்
வருநகுடன் ஒருதக்கன் அயிரா வ தன்குருடன்
மகன்வழுதி கிசுபால னாம்

ஆயும்அறி வாளரொடு தேவர் பணி தாளனே
அவனிபுக ழருமை மதவேள்
அனுதின மு மனதில் நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 47

## நன்னகர்

வாவிபல கூடமுடன் ஆறருகு சேர்வதாய்
மலைகாத வழியினுளதாய்
வாழைகமு கொடுதெங்கு பயிராவ தாய்ச்செந்தெல்
வயல்கள் வாய்க் கால்களுள தாய்

காவிகம லங்குவளை சேரேரி யுள்ளதாய்க்
கனவர்த்த கர்கள் மறைவளோர்
காணரிய பலகுடிகள் நிறையுள்ளதாய்நல்ல
காவல னிருக்கை உளதாய்த்

தேவரா லயமாடல் பாடலணி மாளிகை
சிறக்க வுளதாய்ச் சற்சனர்
சேருமுட மாகுமோ ரூர்கிடைத் ததிலதிக
சீவனமு மேகிடைத்தால்

ஆவலோ டிருந்திடுவ தோசொர்க்க வாசமென்
றறையலாத் அருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 48

## தீநகர்

ஈனசா திகள்குடி யிருப்பதாய் முள்வேலி
யில்லில்லி னுக்குமுள தாய்
இணைமுலை திறந்துதந் தலைவிரித் திடுமாதர்
எங்குநட மாட்டமுள தாய்க்

கானமொரு பக்கமாய் மலையோர மாய்முறைக்
காய்ச்சல்தப் பாதஇட மாய்க்
கள்ளர்பய மாய்நெடிய கயிறிட் டிறைக்கின்ற
கற்கேணி நீருண்ப தாய்

மானமில் லாக்கொடிய துர்ச்சனர் தமக்கேற்ற
மணியமொன் றுண்டான தாய்

மாநிலத் தோர்தல மிருந்ததனில் வெகுவாழ்வு
வாழ்வதிலும் அருநரகி லே

ஆனநெடு நாள்கிடந் தமிழ்தலே சுகமாகும்
அமலனே! அருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 49

## முழுக்கு நாள்

வரும்ஆதி வாரந் தலைக்கெண்ணெ யாகாது
வடிவமிகு மழகு போகும்
வளர்திங்க ளுக்கதிகபொருள்சேரும் அங்கார
வாரந் தனக் கிடர்வரும்

திருமேவு புதனுக்கு மிகுபுத்தி வந்திடுஞ்
செம்பொனுக் குயரறிவு போம்
தேடிய பொருட்சேதமாம்வெள்ளி சனியெண்ணெய்
செல்வமுண் டாயுளுண்டாம்

பரிகார முளதாதி வாரந் தனக்கலரி
பௌமனுக் கானசெழு மண்
பச்சறுகு பொன்னவற் காமெருந் தாளொளிப்
பார்க்கவற் காகுமென வே

அரிதா அறிந்தபே ரெண்ணெய்சேர்த் தேமுழுக்
காடுவா ரருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே 50

## மருத்துவன்

தாதுப் பரீக்ஷைவரு காலதே சத்தொடு
சரீர லட்சண மறிந்து
தன்வந்த்ரி கும்பமுனி தேரர்கொங் கணர்சித்தர்
தமதுவா கட மறிந்து

பேதப் பெருங்குளிகை சுத்திவகை மாத்திரைப்
பிரயோக மோடுபஸ் மம்
பிழையாது மண்டூர செந்தூர லட்சணம்
பேர்பெறுங குணவா கடம்

சோதித்து மூலிகா விதநிகண் டுங்கண்டு
தூயதை லம்லேகி யஞ்
சொல்பக்கு லங்கண்டு வருரோ கநிண்ணயந்
தோற்றியே யமிர்தகர மாய்

ஆதிப்பெருங்கேள்வி யுடையவனா யுர்வேதன்
ஆகுமெம தருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 51

## உண்மை உணர்குறி

சோதிடம் பொய்யாது மெய்யென்ப தறிவரிய
சூழ்கிரக ணஞ்சாட்சி யாம்
சொற்பெரிய வாகடம் நிசமென்கை பேதிதரு
தூயமாத் திரைசாட்சி யாம்

ஆதியிற் செய்ததவ முண்டில்லை யென் பதற்கு
ஆளடிமை யேசாட்சி யாம்
அரிதேவ தேவனென் பதையறிய முதனூல்
அரிச்சுவடி யேசாட்சி யாம்

நாதனே மாதேவ னென்பதற் கோருத்ர
நமகசம கஞ்சாட்சி யாம்
நாயேனை இரட்சிப்ப துன்பாரம் அரி அய
னாளுமர்ச் சனைசெய்சர ணத்து

ஆதிநா யகதுக்க வேதநா யகனான
அண்ணலே! அருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே 52

## பிறவிக்குணம் மாறாமை

கலங்கா தசித்தமுஞ் செல்வமுஞ் ஞானமுங்
கல்வியுங் கருணைவிளை வுங்
கருதரிய வடிவமும் போகமுந் தியாகமுங்
கனரூபம் உளமங்கை யும்

அலங்காத வீரமும் பொறுமையுந் தந்திரமும்
ஆண்மையும் அமுத மொழியும்
ஆனஇச் செயலெலாஞ் சனனவ சனையினால்
ஆகிவரு மன்றி நிலமேல்

நலஞ்சேரு மொருவரைப் பார்த்தது பெறற்கருதி
நண்ணுமோ ரஸ்தாளி தன்
நற்சுவை தனகுவர வேம்புதவ மேநெடிது
நாள்செயினும் வாராது காண்

அலங்கார மாகமலர் கொன்றைமா லிகைசூடும்
அண்ணலே! அருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 53

## ஊழ்வலி

கடலள வுரைத்திடுவர் அரிபிரமர் உருவமுங்
காணும் படிகுரை செய்வார்
காசினியின் அளவுபிர மாணமது சொல்லுவார்
காயத்தின் நிலைமை யறிவார்

விடலரிய சீவநிலை காட்டுவார் மூச்சையும்
விடாமல் தடுத் தடக்கி
மேன்மேலும் யோகசா தனைவிளைப் பாரெட்டி
விண்மீதி னுந்தாவுவார்

தொடலரிய பிரமநிலை காட்டுவா ரெண்வகைத்
தொகையான சித்தி யறிவார்

சூழ்வினை வரும்பொழுது சிக்கியுழல் வாரது
துடைக்கவொரு நான்முகற் கும்
அடைவல எனத்தெரிந் தளவில்பல நூல்சொல்லும்
அண்ணலே! அருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 54

## ஒப்புயர்வு இல்லாமல்

வேதியர்க் கதிகமாஞ் சாதியுங் கனகமக
மேருவுக் கதிக மலையும்
வெண்டிரை கொழுத்துவரு கங்கா நதிக்கதிக
மேதினியி லோடு நதியும்

சோதிதரு மாதவற் கதிகமாங் காந்தியுஞ்
சூழ்கனற் கதிக சுசியும்
நூயதாய் தந்தைக்கு மேலான தெய்வமுஞ்
சுருதிக் குயர்ந்த கலையும்

ஆதிவட மொழிதனக் கதிகமா மொழியுநூ
ரன்னதா னந்தனிலு மோர்
அதிகதா னமுமில்லை யென்றுபல நூலெலாம்
ஆராய்ந்த பேருரைசெய் வார்

ஆதவன் பிரமன்விண் ணவர்முனிவர் பரவவரு
அண்ணலே! அருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 55

## வீண் செயல்

வேட்டகஞ் சேர்வோரும் வீணரே வீண்உரை
விரும்புவோ ரவரின் வீணர்
விருந்துகண் டில்லாள் தனக்கஞ்சி ஓடிமறை
விறகிலோ ரவரின் வீணர்

நாட்டந் தருங்கல்வி யில்லோரும் வீணரே
நாயவர் மேற்கவி சொல்வார்
நானிலந் தனில்வீண ரவரினும் வீணரே
நாரைச் சுமக்கு மெளியோர்

தேட்டறிவி லாதபெரு வீணரே அவரினுஞ்
சேரொரு வரத்து மின்றிச்
செலவுசெய் வோரதிக வீணராம் வீணனாய்த்
திரியுமெளி யேனையாட் கொண்டு

ஆட்டம் செயும்பதாம் புயமுடியின் மேல்வைத்த
அமலனே! அருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 56

## உதவியின்றிக் கெடுவன

மூப்பொருவ ரில்லாத குமரிகுடி வாழ்க்கையும்
மூதரண் இலாத நகரும்
மொழியும்வெகு நாயகர் சேரிடமும் வருமெதுகை
மோனையில் லாதகவி யும்

காப்பமை விலாததோர் நந்தவன மும்நல்ல
கரையிலா நிறைஏரி யுங்
கசடறக் கற்காத வித்தையும் உபதேச
காரண மிலாத தெளிவும்

கோப்புள விநோதமுடை யோரருகு புகழாத
கோதையர்செய் கூத்தாட்டமுங்
குளிர்புனல் நிறைந்துவரும் ஆற்றோரம் அதில்நின்று
கோடுயர்ந் தோங்கு தருவும்

ஆப்பதில் லாததே ரிவையெலா மொன்றாகும்
ஐயனே! அருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 57

## இவையே போதுமெனல்

பொய்யாத வாய்மையுஞ் சீலமுஞ் சார்ந்துள்ளோர்
பூவலஞ் செயவேண்டு மோ
பொல்லாத கொலைகளை விலாதநல் நெறியுளோர்
புகழறஞ் செயவேண்டு மோ

நையாத காமத்தை லோபத்தை விட்டபேர்
நல்லறஞ் செயவேண்டும் மோ
நன்மனோ சக்தியுண் டானபோர் மேலுமொரு
நதிபடிப் திடவேண்டு மோ

மெய்யாநின் அடியரைப் பரவுவோ ருன்பதம்
விரும்பி வழிபட வேண்டு மோ
வேதியர் தமைம்பூசை பண்ணுவோர் வானவரை
வேண்டியர்ச் சனைசெய் வரோ

ஐயாறுடன் கமலைசோணா சலந்திலை
அதிபனே அருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 58

## அரியராவோர்

பதின்மரி லோருத்தர்சபை மெச்திடப் பேசுவோர்
பாடுவோர் தூற்றி லொரு
பார்மீதி லாயிரத் தொருவர்விதி தப்பாது
பாடிப்ர சங்கமிடு வோர்

இதனருமை யறிகுவோர் பதினாயிரத் தொருவர்
இதையறிந் திதய மகிழ்வால்
ஈகின்ற பேர்புவியிலே அருமை யாகவே
இலட்சத்தி லேயொருவ ராம்

துதிபெருக மருமூன்று காலமும் அறிந்தமெய்த்
தூயர்கோ டியிலொருவ ராம்

தொல்லுலகு புகழ்காசி யோகாம் பரங்கயிலை
சூழும் அவினாசி பேரூர்
அதிகமுள வெண்காடு செங்காடு காளத்தி
அத்தனே! அருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே 59

## கற்பு மேம்பாடு

தன்கணவன் உருவமாய்த் தற்புணர வந்தோன்
தனக்கிணங் காத நிறையாள்
தழற்கதி ரெழாமலும் பொழுதுவிடி யாமலுஞ்
சாபங் கொடுத்த செலாள்
மன்னிவளர் அழல்மூழ்கி உலகறிய வேதனது
மகிழ்நனைச் சேர்ந்த பரிவாள்
மைந்தனைக் சுடவந்த இறைவன் தடிந்தவடி
வாள்மாலை யான கனிவாள்
நன்னதி படிந்திடுவ தென்னவார் அழல்மூழ்கி

நாயகனை மேவு தயவா
ணாணிலம் புகழ்சாலி பேர்பெறு நளாயினி
நளினமலர் மேல் வைதேகி
அன்னமென வருசந்த்ர மதிதுரோ பதையென்பர்
ஆதியே! அருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 60

## கோடியுடுக்கும் நாள்

கறைபடா தொளிசேரும் ஆதிவா ரந்தனில்
கட்டலாம் புதியசீலை
கலைமதிக் காகாது பலகாலு மழையினிற்
கடிது நனைவுற் றொழித ரும்

குறைபடா திடர்வரு வீரியம் போமரிள
குருதிவா ரந்தனக் குக்
கொஞ்சநா ளிற்கிழியும் வெற்றிபோம் புந்தியிற்
குருவார மதிலணிந் தால்

மறைபடா தழகுண்டு மேன்மேலும் நல்லாடை
வருமினிய சுக்கிரற் கோ
வாழ்வுண்டு திருவுண்டு பொல்லா சனியற்கு
வாழ்வுபோ மரண முண்டாம்

அறைகின்ற வேதா மத்தின்வடி வாய்விளங்கும்
அமலனே! அருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 61

## ச கு ண ம்

சொல்லரிய கருடன்வானரம் அரவம் மூஞ்சூறு
சூகரங் கீரி கலைமான்
துய்யபது ரத்வாசம் அட்டை எலி புன்கூகை
சொற்பெருக மருவும் ஆந்தை

வெல்லரிய கரடிகாட்டான்பூனை புலிமேல்
விலங்குமிரு நா உடும்பு
மிகவுரைசெ யிவையெலாம் வலமிருந் திடமாகில்
வெற்றியுண் டதிக நலமாம்

ஒல்லையின் வழிப்பயண மாகுமவர் தலைதாக்கல்
ஒகுதுடை யிருத்தல் பற்றல்
ஒருதும்மல் ஆணையிடல் இருமல் போகேலென்னல்
உபசுருதி சொல்லிவை யெலாம்

அல்லல்தரு நல்லஅல வென்பர்முதி போர்பரவும்
அமலனே! அருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 62

## இ து வு ம து

நாமயில் பசுங்கிள்ளை கோழிகொக் கொடுகாக்கை
நாவிசிச் சிலியோந்தி தான்
நரையான் கடுத்தவாய்ச் செம்போத் துடன்மேதி
நாடரிய சுரபி மறையோர்

வரியுழுவை முதலியவை அனைத்தும்வல மாயிடில்
வழிப்பயண மாகை நன்றாம்
மற்றுமிவை யன்றியே குதிரையனுமா னித்தன்
வாய்ச்சொல் வாவா வென்றிடல்

தருவளை தொனித்திடுதல் கொம்புகிடு முடி முரசு
தப்பட்டை ஒலிவல் வேட்டுத்
தனிமணி முழக்கெழுதல் இவையெலாம் ஊர்வழி
தனக்கேக நன்மை யென்பார்

அருணகிர ணோதயத் தருணபா னுவையனைய
அண்ணலே! அருமை மதவேள
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 63

## இ து வு ம து

தலைவிரித் தெதிர்வருதல் ஒற்றைப் பிராமணன்
தவசி சன்னாசி தட்டான்
தனமிலா வெறுமார்பி மூக்கறைபுல் விறகுதலை
தட்டைமுடி மொட்டைத் தலை

கலன்கழி மடந்தையர்க் குசக்கலஞ் செக்கான்
கறுத்ததில தைலமிவைகள்
காணஎதிர் வரவொண்ணா நீர்க்குடம் எருக்கூடை
கனிபுலா லுபய மறையோர்

நலமிகு சுமங்கலை கிழங்குசூ தகமங்கை
நாளும்வண் ணான் அழுக்கும்

நசைபெருகு பாற்கலசம் மணிவளையல் மலரிவை
நாடியெதிர் வரநன்னை யாம் (கள்

அலைகொண்ட கங்கைபுனை வேணியாய்! பரசணியும்
அண்ணலே! அருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 64

## உணவில் விலங்கு

கைவிலைக் குக்கொளும் பால்அசப் பால்வருங்
காராக் கறந்த வெண் பால்
காளான் முருங்கைசுர கொம்மடி பழஞ்சோறு
காந்திக் கரிந்த சோறு

செவ்வையில் சிறுகீரை பீர்க்கத்தி வெள்ளுப்பு
தென்னைவெல்லம் 1 மலா வகஞ்
சீரிலா வெள்ளுள்ளி யீருள்ளி 2 யிங்குவொடு
சிலப்பில்வெண் கத்தரிக்காய்

எவ்வமில் சிவன்கோயில் நிர்மாலி யங்கிரணம்
இலகுசுட ரில்லாத ஊண்
இவையெலாஞ் சீலமுடை யோர்களுக் காகா
எனப்பழைய நூலுரை செயும்

ஐவகைப் புலன்வென்ற முனிவர்விண் ணவர் போற்று
அமலனே! அருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 65

## நற்பொருளிற் குற்றம்

பேரான கங்கா நதிக்கும் அதன் மேல்வரும்
3 பேனமே தோஷமா கும்
பெருகிவளர் வெண்மதிக் குள்ளுட் களங்கமே
பெரிதான தோஷ மாகும்

---

1 மலாவகம்-பிண்ணாக்கு 2 இங்கு-பெருங்காயம்.
3 பேனம் - நுரை.

சீரரந் தபோதனர்க் கொருவர்மேல் வருகின்ற
சீற்றமே தோஷ மாகும்
தீதின்முடி மன்னவர் விசாரித் திடாதொன்று
செய்தவர் மேல்தோஷ மாம்

தாராளமாமிகத் தந்ளோர தாராகை
தானிரப் போர்தோஷ மாம்
சாரமுள நற்கருப் பஞ்சாறு கைப்பதவர்
1 தாலஞ் செய் தோஷ மாகும்

நூராயு மொருநான் மறைக்குமெட்டா தொளிதரும்
அண்ணலே! அருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 66

## மனைகோலுவதற்கு மாதம்

சித்திரைத் திங்கள் தனில் மனைகோல மனைபுகச்
செல்வமுண் டதினுநல மே
சேரும்வை காசிக்கு மேனாள் அரன்புரந்
தீயிட்ட தானியா கா

வெற்றிகொள் இராகவன் தேவிசிறை சேர்கடகம்
வீறல்ல ஆவணி சுகம்
மேவிடுங் கன்னிஇர ணியன்மாண்ட தாகது
மேன்மையுண் டைப்பசிக் கே

உத்தமங் கார்த்திகைக் காகாது மார்கழியில்
ஓங்கு பாரதம் வந்தநாள்
உயர்வுண்டு மகரத்தில் மாசிமா தத்தில்விடம்
உம்பர்கோன் உண்ட தாகாது

அத்த! நீ மாரனை எரித்தபங் குனிதானும்
ஆகுமோ அருமை மதவேள்

1 தாலம்-நா

அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 67

## விருந்து வாரம்

செங்கதிர்க் குறவுபோம் பகைவரும் விருந்தொருவர்
செய்யொணா துண்ணொ ணாது
திங்களுக் குறவுண்டு நன்மையாம் பகைவருஞ்
செவ்வாய் விருந்தருந் தார்

பொங்குபுதன் நன்மையுண் டுறவாம் விருந்துணப்
பொன்னவற் கதிகபகை யாம்
புகரவற் காகிலோ நெடுநாள் விரோதமாய்
போனஉற வுந்திரும் பும்

மங்குல்நிகர் சனிவார நல்லதா மிதனினு
மனமொத் திருந்த இடமே
வாலாய மாய்ப்போய் விருந்துண விருந்துதவ
வாய்த்த நாளென் றறியலாம்

அங்கையில் விளங்கிவளர் துங்கமழு வாளனே!
அண்ணலே அருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே 68

## பூப்பு வாரம்

அருக்கனுக் கதிரோகி யாவள்நற் சோமனுக்
கானகற் புடைய ளாவாள்
அங்கார கற்குவெகு துக்கியா வாள்புந்தி
அளவில் பைங் குழவிபெறு வாள்

திருத்தகு வியாழத்தின் மிக்கசம் பத்தினொடு
சிறுவரைப் பெற்றெடுப் பாள்
சீருடைய பார்க்கவற் கதிபோக வதியுமாந்
திருவுமுண் டாயிருப் பாள்

கருத்தழிந் தெழில்குன்றி வறுமைகொண் டலைகுவாள்
காரிவா ரத்தி லாகில்
களபமுலை மடமாதர் புட்பவதி யாம்வார
காலபல னென்றுரை செய்குவார்
அருத்தியுட னெளியேனை யாட்கொண்ட சோதியே
அண்ணலே! அருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 69

## பூப்பிலக்கினம்

வறுமைதப் பாதுவரு மேடத்தில் இடபத்தில்
மாறாது விபசாரி யாம்
வாழ்வுண்டு போகமுண் டாகுமிது னம்கடகம்
வலிதினிற் பிறரை யணைவாள்
சிறுமைசெயு மிடிசேர்வள் மிருகேந் திரற்கெனிற்
சீர்பெறுவள் கன்னியென் னில்
செட்டுடையள் துலையெனிற் பிணியால் மெலிந்திடு
தேளினுக்குத் தனுசெ னில் (வாள்
நெறிசிதைவள் பூருவத் தபரநெறி யுடையளாம்
நீள்மகர பான மிலளாம்
நிறைபோக வதிகும்ப மெனில்மீன மென்னிலோ
நெடியபே ரறிவுடைய ளாம்
அறிவாளர் மடமாதர் தமையறியி ராசிபலன்
அதுவென்ப ரருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 70

## தீவுங் கடலும்

நாவலந் தீவினைச் சூழ்கருங் கடலளவு
லட்சம்யோ சனையிதனை யே

நாடொறுஞ் சூழ்வதில் வந்தீ வதைச்சூழ்தல்
நற்கழைச் சாற்றின் கடல்
மேவுமிது சூழ்வது குசத்தீ வதைச்சூழ்தல்
மிகுமதுக் கட லதனையே
விழைவொடுஞ் சூழ்தல்கிர வுஞ்சதீ வம்மிதனின்
மேற்சூழ்தல் நெய்கடல தாம்
பூவிலிது சூழ்தல்சா கத்தீவ மிங்கிதைப்
போர்ப்பது திருப்பாற் கடல்
போதவது சூழ்தல்சான் மலிதீவ மாந்தயிர்ப்
புணரியப் பாலுமப் பால்
ஆவலுறு புட்கரத் தீவாமிதைச் சூழ்வது
அரும்புணற் றருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 71

## மேலான பொருள்

சுழிசுத்த மாயிருந் ததிலும் படைக்கான
துரகமோர் மாணிக்க மாம்
சூழ்புவிக் கரசனா யதிலே விவேகமுள
துரையுமோர் மாணிக்க மாம்
பழுதற்ற அதிரூப வதியுமாய்க் கற்புடைய
பாவையோர் மாணிக்க மாம்
பலகலைகள் கற்றறிய யடக்கமுள பாவலன்
பார்க்கிலோர் மாணிக்க மாம்
ஒழிவற்ற செல்வனா யதிலே தியாகியா
முசிதனோர் மாணிக்க மாம்
உத்தம குலத்துதித் ததிலுமோ மெஞ்ஞான
முடையனோர் மாணிக்க மாம்
அறிவற்ற வேதாக மத்தின்வடு வாய்விளங்கும்
அமலனே! அருமை மதவேள்

அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே 72

## உண்டி இலையும் முறைமையும்

வாழையிலை புன்னைமர சுடன்நல் குருக்கத்தி
மாப்பலாத் தெங்கு பன்னீர்
மாசிலமு துண்ணலாம் அண்ணாத வோர் அரசு
வசனஞ் செழும் பாடலம்

தாழையிலை இத்திஆல் ஏரண்ட பத்திரஞ்
சகதேவ முள்முருக் குச்
சாருமிவை யன்றிவெண் பாலெருக் கிச்சிலிலை
தனினுமுண் டிடவொணா தால்

தாழ்விலாச் சிற்றுண்டி நீரடிக் கடிபருகல்
சாதங்கள் பல அருந்தல்
சற்றுண்டல் மெத்தஊண் இத்தனையுமெய்ப்பிணி
தனக்கிட மெனப்பருகிடார்

ஆழ்புடை சூழுலகில் வேளாளர் குலதிலகன்
ஆகுமெம தருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 73

## கவிஞர் வறுமை

எழுதப் படிக்கவகை யெரியாத மூடனை
இணையிலாச் சேடனென்றும்
ஈவதில் லாதகண லோபியைச் சபைதனில்
இணையிலாக் கர்ன னென்றும்

ஆழகற்ற வெகுகோர ரூபத்தை யுடையோனை
அதிவடிவ மார னென்றும்
ஆயுத மெடுக்கவுந் தெரியாத பேடிகளை
ஆண்மைமிகு விஜயனென்றும்

முழுவதும் பொய்சொல்லி யளைகின்ற வஞ்சகனை
மொழிஅரிச் சந்திரனென் றும்
மூதுலகி லிவ்வண்ணஞ் சொல்லியே கவிராஜர்
முறையின்றி யேற்ப தென்னோ!

அழலென உதித்துவரு விடமுண்ட கண்டனே!
அமலனே யருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 74

## கவிஞன்

தெள்ளமிர்த தாரையென மதுரங் கதித்தபைந்
தேன்மடைதிறந்த தெனவே
செப்புமுத் தமிழினொடு நாற்கவிதை நாற்பொருள்
தெரிந்துரைசெய் திறமையுடனே

விள்ளரிய காவியத் துட்பொருள் அலங்காரம்
விரிவிலக் கணவிகற் பம்
வேறுமுள தொன்னூல்வழக்கு முலகத்தியல்பும்
மிக்கப்ர பந்த வுண்மை

உள்ளவெல் லாமறிந் தலையடங் குங்குடலை
ஒத்ததிக சபைகண்ட போது
ஓங்கலை யொலிக்கின்ற கடல்போற் ப்ரசங்கமது
உரைப்பவன் கவிஞ னாகும்

அள்ளிவிட முண்டகனி வாயனே! நேயனே!
அமலனே! யருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 75

## நற்சார்பு

காணரிய பெரியோர்கள் தெரிசனம் லயிப்பதே
கண்ணிணைகள் செய்புண்ணியம்

கருணையா யவர்சொன்மொழி கேட்டிட லபிப்பதே
காதுசெய் திடுபுண்ணி யம்
பேணிஅவர் புகழையே துதிசெய லபித்திடுதல்
பேசில்வாய் செய்யுபுண் ணியம்
பிழையாம லவர்தமைத் தொழுதிட லபிப்பதுகை
பெரிதுசெய் திடுபுண் ணியம்
வீண்நெறி செலாமலவர் பணிவிடை லபிப்பதே
மேனிசெய் திடுபுண்ணியம்
விழைவொடவர் சொற்படி நடந்திட லபிப்பதே
மிக்கபூ ருவபுண்ணி யம்
ஆணவ மெனுங்களை களைந்தறி வினைத்தந்த
அண்ணலே! அருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 76

## பிறந்த நாளோடு வருகின்ற வாரபலன்

ஜென்ம நட்சத்திரத் தாதிவா ரம்வரில்
தீராத அலைச்க லுண்டாம்
திங்களுக் காகில்வெகு சுகபோக சனத்தினொடு
திருமாதின் அருளு முண்டாம்
வன்மைதரும் அங்கார வாரம்வந் தாற்சிறிதும்
வாராது சுகம தென்பார்
மாசில்பல கலைபயில்வர் மேன்மையாம் புந்தியே
வாரத்துடன் கூடினால் (னும்
நன்மைதரு குருவார மதுசேர்ந்து வரிலாடை
நன்மையுட னேவந்தி டும்
நாரிய ருடன்போக மிகவுமுண் டொருவெள்ளி
நல்ல வாரத்தில் வந்தால்

அன்மருவு பீடையுண் டாமென்பர் சனியனுக்கு
அதிபனே அருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 77

## இதனை உடையவர்க்கு இது இல்லையெனல்

பொன்னாசை உள்ளவர்க் குறவேது குருவேது
பொங்குபசி யுள்ளபேர்க் கும்
போதவே சுசியேது ருசியேது மயல்கொண்டு
பொதுமாதர் விழிவலையி லே

எந்நாளும் அலைபவர்க் கச்சமொடு வெட்கமே
தென்றென்றும் உறுகல்வி மேல்
இச்சையுள பேர்க்கதிக சுகமேது துயிலேது
எளிதா யிருந்து கொண்டே

பன்னாளும் அலைபவர்க் கிகழேது புகழேது
பாரிலொரு வர்க்கதிக மே
பண்ணியிடு மூடருக் கறமேது மறமலாற்
பகர்நிறைய மொன்றுளது காண்

1 அன்னாண வருகரி உரித்தணியு மெய்யனே!
அமலனே! யருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 78

## மழைநாள் குறிப்பு

சித்திரைத் திங்கள்பதின் மூன்றுக்கு மேல்நல்ல
சீரான பரணி மழையும்
தீதில்லை காசியிற் பூரணை கழிந்துபின்
சேருநா லாநாளி னில்

---

1 அல் — நாண - அன்னாண.

ஒத்துவரு மழையுமவ் ஆனியில் தேய்பிறையில்
ஓங்குமே காதசியி னில்
ஒளிர்பரிதி வீழ்பொழுதில் மந்தார மும்மழை
உண்டா யிருந்தாடி யில்

பத்திவரு தேதிஐந் தினில்ஆதி வாரமும்
பகரும் ஆவணி மூலநாள்
பரிதியு மறைந்திடக் கனமழை பொழிப்திடப்
பாரில்வெகு விளைவு முண்டாம்

அத்தனே! பைங்குவளை மாலையணி மார்பனாம்
அண்ணலெம தருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 79

## இருந்தும் உதவாமை

சமயத்தில் உதவாத நிதியமேன் மிக்கதுயர்
சார்பொழுதி லாதகிளை யேன்
சபைமுகத் துதவாத கல்வியேன் எதிரிவரு
சமரத்து இலாத படையேன்

விமலனுக் குதவாத பூசையேன் நாளும்இருள்
வேலைக் கிலாத சுடரேன்
வெம்பசிக் குதவாத அன்னமேன் நீடுகுளிர்
வேளைக் கிலாத கலையேன்

தமதுதளர் வேளக் கிலாதஓர் மனைவியே
சரசத் திலாத நகையேன்
சாமரண காலத்தில் உதவாத புதல்வனேன்
தரணிமீ தென்பர் கண்டாய்

அமரர்க்கு முனிவர்க்கும் ஒருவர்க்கும் எட்டாத
ஆதியே! அருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே 80

## மறையோர் சிறப்பு

ஓர்ஆறு தொழிலையுங் கைவிடார் சௌசவிதி
ஒன்றுந் தப்பாது புரிவார்
உதயாதி யிற்சென்று நீர்படிகு வார்காலம்
ஒருமூன்றி னுக்கு மறவாது

ஆராய்ந்து காயத்திரி அதுசெபிப் பார்நாளும்
அதிதி பூசைகள் பண்ணுவார்
யாகாதி கருமங்கள் மந்த்ரகிரி யாலோபம்
இன்றியே செய்து வருவார்

பேராசை கொண்டார் வைதிகநன் மார்க்கமே
பிழையா திருக்கு மறையோர்
பெய்யெனப்பெயுமுகில் அவர்மகிமை யெவர்களும்
பேசுதற் கரிதரிது காண்

ஆரார் நெடுஞ்சடில அமலனே! எனையாளும்
அண்ணலே! அருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 81

## அரசர் இயல்பு

மனுநீதி முறையும் பரராசர் கொண்டாட
வரும்அதிக ரணவீர மும்
வாள்விஜய மொடுசரச சாதன விசேஷமும்
வாசி மதகரி யேற்றமும்

கனமாம் அமைச்சரும் பலமான 1 துர்க்கமும்
கைகண்ட போர்ப் படைஞருங்
கஜரத பதாதியுந் துரகப்ர வாகமுங்
கால தேசங்க ளௌவையும்

1 துர்க்கம் - கோட்டை

இனிதா யறிந்ததா னாபதிக ளொடுசமர்க்
கிளையாத தள கர்த்தரும்
என்றும்வற் றாததன தானிய சமுத்திரமும்
ஏற்றமுள குடி வர்க்கமும்

அனைவோரு மெச்சஇங் கிவையெலாம் உடையபேர்
அரசராம் அருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 82

## வைசியர் சிறப்பு

தீள்கடல் கடந்திடுவர் மலையாள மும்போவார்
நெடிது தூரந் திரிந்து
நினைவுதடு மாறார்கள் சலியார்கள் சொருள்தேடி
நீள்நிலத் தரசு புரியும்

வாள்உழவ ரைத்தமது கைவசஞ் செய்வார்கள்
வருமிடம் வராத இடமும்
மனதையு மறிந்துதவி ஒன்றுநூ றாயிட
வளர்ப்பவர்வரு துலை துலைக்கும்

ஆள்விடுவர் மலிகுறை வதுவிசா ரிந்திடுவர்
அளவில் பற்பல சரக்கும்
அமைவுறக் கொள்வர்விற் பார்கணக் கதிலணுவும்
அறவிடார் செலவு வரிலோ

ஆளியொத் தேமலையின் அளவுங்கொடுத்திடுவர்
அருள்வைசியர் அருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 83

## வேளாளர் சிறப்பு

வாசனாதி கருமமுந் தப்பாமல் வேதியர்
இயற்றிநல் லோர் பெறுவதும்

இராஜ்யபா ரஞ்செய்து முடிமன்னர் வெற்றிகொண்
என்றும்நல் லோர் பெறுவதும் (ரு

வசனாதி தப்பாது தனதானி யந்தேடி
வைசியர் நல்லோர் பெறுவதும்
மற்றுமுள பேரெலாம் மிடியென் றிடாததிக
வளமைபெற் றோர் வபறுவதும்

திசைதோறும் உள்ளபல தேவா லாயம்பூசை
செய்யநல் லோர் பெறுவதும்
சீர்கொண்ட பைங்குவலள மாலைபுனை வேளாளர்
செய்யு மேழிப் பெருமைகாண்

அசையாது வெள்ளிமலை தனில்வேவி வாழ்கின்ற
அதிபனெம தருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 84

## தானாதிபதி மந்திரி சேனாதிபதிகளின் இயல்பு

தன்னரசர் வலுமையும் பரராசர் எண்ணமுஞ்
சாலமேல் வரு கருமமும்
தானறிந் ததிபுத்தி யுத்தியுண் டாயினோன்
தானாதி பதியாகு வான்

மன்னவர் மனத்தையுங் காலதே சத்தையும்
வாழ்குடி படைத் திறமையும்
மந்திரா லோசனையும் எல்லாம் அறிந்தவன்
வளமான மதி மந்திரி

துன்னிய படைக்குணங் கரிபரி பரீக்ஷையே
சூழ்பகைவர் புரி சூழ்ச்சியும்
தோலாத வெற்றியுந் திடமான சித்தியுள
சூரனே சேனாதி பன்

அன்னையினு நல்லமலை மங்கைபங் காளனே!
அனகனே! அருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 85

## இராஜ கருணீகர் சிறப்பு

வருமோலை உத்தரத் தெழுதிவரு பொருளினால்
வரவிடுப் போன் மனதையும்
மருவிவரு கருமமுந் தேசகா லத்தையும்
வருகரத லாமலக மாய்

விரைவா யறிந்தரசர் எண்ணில்எண் ணினையள
விடவெழுத வாசிக்க வும்
வெற்றிகொண் டேபெரிய பும்தியுடை யோன்புவி
மேன்மை ராயச தாரனாம் (யில்

காருவா யறிந்துதொகை ஈராறு நொடியினிற்
கடிதேற் றிடக் குறைக்கக்
கடுகையொரு மலையாக மலையையொரு கடுகுமாக்
காட்டுவோன் கருணீக னாம்

அருவாகி உருவாகி எளிதாகி வெளியாகும்
அண்ணலே! யருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 86

## கோபத்தின் கொடுமை

கோபமே பாவங்க ளுக்கெலாந் தாய்தந்தை
கோபமே குடி கெடுக்குங்
கோபமே ஒன்றையுங் கூடிவர வொட்டாது
கோபமே துயர் கொடுக்கும்

கோபமே பொல்லாது கோபமே சீர்கேடு
கோபமே உற வறுக்குங்

கோபமே பழிசெயுங் கோபமே பகையாளி
கோபமே கருணை போக்கும்
கோபமே ஈனமாங் கோபமே எவரையுங்
கூடாம லொருவ னாக்குங்

கோபமே மறலிமுன் கொண்டுபோய்த் தீயநரகக்
குழியி னிற்றள்ளு மால்
ஆபத்தெ லாந்தவிர்த் தென்னையாட்கொண்டரு
அமலனே! அருமை மதவேள்

அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே 87

## பல் துறை

தான்புரி தவத்தையுங் கொடையையும் புகழுவோர்
நங்களுக் கவை தழைவுறா
சற்றும்அறி வில்லாமல் அந்தணரை நிந்தனைசெய்
தயவுலோ ராயுள் பெருகார்

மேன்படு நறுங்கலவை மாலைதயிர் பால்புலால்
வீடுநற் செந்நெல் இவைகள்
வேறொருவர் தந்திடினு மநுமொழி அறிந்தபேர்
விலைகொடுத் தேகொள்ளு வார்

தேன்கனி கிழங்குவிற கிலையிவை அனைத்தையுந்
தீண்டரிய நீச ரெனினுஞ்
சீர்பெற அளிப்பரேல் இகழாது கைக்கொள்வார்
சீலமுடை யோரென்ப ரால்

ஆன்கொடி உயர்த்தஉமை நேசனே! ஈசனே!
அண்ணலே! அருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே 88

## தத்துவத் திரயம்

பூதமோர் ஐந்துடன் புலனைந்து ஞானம்
பொருந்தும் இந்திரிய மைந்தும்
பொருவில்கன் மேந்திரியம் ஐந்துமன மாதியாம்
புகலரிய கரண நான்கும்

ஓதினோர் இவையாத்ம தத்துவமெ னச்சொல்வர்
உயர்கால நியதி கலையோடு
ஓங்கிவரு வித்தைரா கம்புருடன் மாயையென்று
உரைசெய்யு மோரேழு மே

தீதில்வித் யாதத்வ மென்றிடுவ ரிவையலால்
திகழ்சுத்த வித்தை யீசன்
சீர்கொள்சா தாக்கியஞ் சத்திசிவம் ஐந்துமே
சிவதத்வ மென் றறைகுவார்

ஆதிவடநீழலிற் சனகாதி யர்க்கருள்செய்
அண்ணலே! அருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 89

## மன்மத பாணமும் அவற்றின் குண முதலியவும்

வனசஞ் செழுஞ்சூதம் உடன்அசோ கந்தளவ
மவர்நீலம் இவை யைந்துமே
மாரவேள் கணைகளாம் இவைசெயுங் குணமுளரி
மனதில் ஆசையை யெழுப்பும்

வினவில்ஒள் சூதமலர் மெய்ப்பசலை யுண்டாக்கும்
மிகஅசோ கந்துயர் செயும்
வீழ்த்திடுங் குளிர்முல்லை நீலம்உயிர்போக்கிவிடும்
மேவுமிவை செயு மவத்தை

நினைவிலது வேநோக்கம் வேறொன்றி லாசையற
நெட்டுயிர்ப் பொடு பிதற்றல்

நெஞ்சந் திடுக்கிடல் அனம்வெறுத் திடல்காய்ச்
நேர்தல்மௌ னம் புரிகுதல் (சல்

அனையஉயி ருண்டில்லை யென்னலீ ரைந்துமாம்
அத்தனே! அருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே 90

## மன்மதன் உபகரணங்கள்

வெஞ்சிலை செழுங்கழைவில் நாரிகரு வண்டினம்
மேல்விடுங் கணைகள் அலரா
வீசிடுந் தென்றல்தேர் பைங்கிள்ளை யேபரிகள்
வேழங் கடலே இருளாம்

வஞ்சிகர் பெருஞ்சேனை கைதையுடைய வாள்நெடிய
வண்மைபெறு கடல் முரசமாம்
மகரம் பதாகைவரு கோகிலங் காகளம்
மனதே பெரும் போர்க்களம்

சஞ்சரிக இசைபாடல் குமுதநே யன்கவிகை
சார்இரதி யேமனைவி யாம்
தறுகண்ட மாதரி முலைகுட மாம்அல்குல்
தவறா திருக்கு மிடமாம்

அஞ்சுகணை மாரவேட் கென்பரெளி யோர்க்கெலாம்
அமுதமே! யருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே 91

## பகைகொளத் தகாதவர்

மன்னவர் அமைச்சர்துர்ச் சனர் தூதரொடு
மாறாத மர்ம முடையோர்
வலுவர்கரு ணீகர்மிகு பாகஞ்செய் தன்னமிடு
மடையர் மந்திர வாதியர்

சொன்னமுடை யோர்புலையர் உபதேசம் அதுசெய்
சூழ் வயித்தியர் கவிதைகள் (வோர்
சொற்றிடு புலவரிவர் பதினைந்து பேரொடுஞ்
சொந்பனந் தனி லாகிலும்

நன்னெறி யறிந்தபேர் பகைசெய் திடார்களிந்
நானிலத் தென்பர் கண்டாய்
நாரியோர் பாகனே! வேதாக மம்பரவு
நம்பனே! அன்பர் நிதியே!

அன்னம்ஊர் பிரமனுங் கண்ணனுங் காணாத
அண்ணலே! அருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 92

## இதாகிதஞ் செய்து பயன் கொள்வன

சுவைசேர் கரும்பைவெண் பாலைப் பருத்தியைச்
சொல்லுசல் நெல்லை எள்ளைத்
தூயதெங் கின்கனியை எண்ணரத துட்டரைத்
தொண்டரைத் தொழு தொழும்பை

நவைதிரு மாறுகண் டித்தே பயன்கொள்வர்
நற்றமிழ்க் கவி வாணரை
நலமிக்க செழுமலரை ஓவிய மெனத்தக்க
நயமுள்ள நாரியர் தமைப்

புவிமீதி லுபகார நெஞ்சரைச் சிறுவரைப்
போர்வீர ரைத் தூயரைப்
போதவும் பரிவோ டிதஞ்செய்து மிகுபயன்
புகழ்பெறக் கொள்வர் கண்டாய்

அவமதி தவிர்த்தென்னை யாட்கொண்ட வள்ளலே
அண்ணலே! அருமை மதவேள்

அநுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 93

## த ரு ம ம்

பெறுமில்பெறு வித்தலொடு காதோலை நாடொறும்
பிள்ளைக ளருந்திடும் பால்
பேசரிய சத்திரம் மடம்மா வுரிஞ்சுகல்
பெண்போ நாவிதன் வணான்

மறைமொழிக ணாடிதண்ணீர்தலைக் கெண் ணெய்பசு
வாயினுறை பிண மடக்கல்
வாவியிறும் உயிர்மீட்டல் தின்பொரு ளடைகாய்
வழங்கல் சுண்ணாம் புதவுதல்

சிறையுறு பவர்க்கமுது வேற்றிலங் காத்தல்பொழில்
செய்தல்முன் னூலின் மணந்
திகழ்விலங் கூண்பிச்சை அறுசமய ருக்குண்டி
தேவ ராலய மவுஷதம்

அறைதல்கற் போர்கன்னம் நாலெட் டறங்களுமுன்
அன்னைசெயல் அருமை மதவேள்
அநுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 94

## இ ல் ல ற ம்

தந்தைதாய் சற்குருவை இட்டதெய் வங்களைச்
சன்மார்க்கம் உள மனைவியைத்
தவறாத சுற்றத்தை ஏவாத மக்களைத்
தனைநம்பி வருவோர் களைச்

சிந்தைமகிழ் வெய்தவே பணிவிடை செய்வோககளை
தென்புலத் தோர்வறிஞ ரைத்
தீதிலா அதிதியைப் பரிவுடைய துணைவரைத்
தேனுவைப் பூசுகர் தமைச்

சந்ததஞ் செய்கடனை என்றுமிவை பிழையாது
தான்புரிந் திடலில்லறம்
சாருநல முடையராந் துறவறத் தோருமிவர்
தம்முடன் சரியா யிடார்

அந்தரி உயிர்கெலாந் தாய்தனிலு நல்லவட்
கன்பனே! யருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 95

## புராணம்

தலைமைசேர் பௌடிகம் இலிங்கமார்க் கண்டம்
சாரும் வாமனம் மச்சமே
சைவம் பெருங்கூர்மம் வருவாரா கங்காந்தளழில்
சரிதமே பிர மாண்டமும்

நிலைமைசேரிப்பத்தும் உயர்சிவ புராணமா
நெடியமால் கதை வைணவம்
நீதிசேர் காருட நாரதம் பாகவத
நீடிய புராண நன்காம்

கலைவளர்சொல் பதுமமொடு பிரமம்மை வர்த்தமே
கமலா லயன் கதையாம்
கதிரவன் காதையே சூரிய புராணமாம்
கனல்காதை ஆக்கி னேயம்

அலைகொண்ட நதியும் வெண்மதியும் அறுகும்புனை
அத்தனே! அருமை மதவேள் (யும்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 96

## புகழ்ச்சி

பருகாத அமுதொருவர் பண்ணாத பூஷணம்
பாரில் மறையாத நிதியம்

பரிதிகண் டலராத நிலவுகண் டுலராத
பண்புடைய பங்கே ருகம்
கருகாத புயல்கலைகள் அருகாத திங்கள்வெங்
கானி லுறையாத சீயம்
கருதரிய இக்குண மனைத்துமுண் டானபேர்
காசினியில் அருமை யாகும்
தெரியவுரை செய்யின்மொழி கீர்த்திவரு கல்வியொடு
சீரிதயம் ஈகை வதனம்
திடமான வீரமிவை என்றறிகு வார்களிச்
செகமெலாங் கொண்டா டவே
அருள்கற்ப தருவென்ன ஓங்கிடுந் தானதுரை
ஆகுமெம தருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 97

## திருமால் அவதாரம்

சோமுகா சுரனைமுன் வதைத்தமரர் துயர்கெடச்
சுருதிதந் ததுமச்ச மாகும்
சுரர்தமக் கமுதீந்த தாமையாம் பாய்போற்
சுருட்டிமா நிலமெடுத் தே
போம்இரணி யாக்கதனை உயிருண்ட ஏனமாம்
பொல்லா கனக னுயிரை
போக்கிய நரசிங்கம் உலகளந் தோங்கியது
புனித வாமன மூர்த்தியாம்
ஏழுறும் இராவணனை வென்றவன் இராகவன்
இரவிகுலம் வேரறுத் தோன்
ஏர்பரசு ராமன்வரு கண்ணனோடு பலராமன்
இப்புவி பயந் தவிர்த்தோர்

ஆமினிய கற்கியினி மேல்வருவ திவைபத்து
அரியவடிவம் அருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 98

## சிவமூர்த்தி

பிறைசூடி உமைநேசன் விடைஊர்தி நடமிடும்
பெரியனுயர் வதுவை வடிவன்
பிச்சாட னன்காம தகனன்மற லியைவென்ற
பெம்மான் புரந் தகித்தோன்

மறமலி சலந்தரனை மாய்த்தவன் பிரமன்முடி
வெளவினோன் வீரே சுரன்
மருவுநர சிங்கத்தை வென்ற அரன் உமைபாகன்
வனசரன் கங்கா ளனே

விறன்மேவு சண்டேச ரக்ஷகன் கடுமாந்தி
மிக்கசக் கர முதவினோன்
விநாயக கருள்செய்தோன் குகனுமை யுடன்கூடி
மிளிரேக பாதன்சுகன்

அறவறிய தக்ஷணாமூர்த்தியோ டிலிங்கமாம்
ஐயனே யருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே 99

## கவி வணக்கம்

மலரிதழி பைங்குவளை மென்முல்லை மல்லிகை
மருக்கொழுந் துயர் கூவிளம்
மற்றுமுள வாசமலர் பத்திரஞ் கிலர்சூட
மணிமுடி தனிற் பொறுத்தே

சிலரெருக் கொடுவனத் துட்பூளை பச்சறுகு
செம்முள்ளி மலர் சூடவே
சித்தம்வைத் திடவுமங் கீகரித் திடுமகா
தேவ தேவா! தெரிந்தே

கலைவல அரைக்குநன் கவியொடு அம்பலவாண
கவிராய னாகு மென்புன்
கவியையுஞ் சூடியே மனமகிழ்ந் திடுவதுன்
கடனாகும் அடல் நாகமும்

அலைபெருகு கங்கையுஞ் செழுமதி மும்புனையும்
அமலனே அருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. 100

அறப்பளீ சுர சதகம் முற்றிற்று

திருமால் அச்சகம் - யாழ்ப்பாணம்.